
உ







# ஞானச்சுடர்

## மலர் 2004

மார்கழி


முருகா

ஓம்

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



## குறள் வழி

உலகத் தோடொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள்:- அறிவு ஒழுக்கங்களாற் சிறந்தவர்களோடு ஒத்து நடத்தல் வேண்டும். அவ்வாறு நடக்காதவர்கள் பல நூல்களைக் கற்றாராயினும் அறிவில்லாதவர்களேயாவார்.

(140)

⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘



## நற்சிந்தனை

### குதம்பாய்- 4

எனக்குந் தனக்கும்பிரி வில்லையென்ற என்னாசான்
தனக்குவமை சொல்வதுண்டோ - குதம்பாய்
தனக்குவமை சொல்வதுண்டோ

ஏதும் சிவன்செயலென் றெண்ணும் பெரியோர்க்குத்
தீதுதான் ஆவதுண்டோ - குதம்பாய்
தீதுதான் ஆவதுண்டோ

ஐயமெல்லாம் நீக்கியென்னை அன்புசெய்ய வைத்தவனை
வையகத்தில் மறப்பேனோ - குதம்பாய்
வையகத்தில் மறப்பேனோ

# ஞானச்சுடர்



வெளியீடு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 84

# 2004 மார்கழி

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| குருவாய் வருவாய் | சிவ. மகாலிங்கம் | 1 - 4 |
| திருவாசகத்தேன் | காரை எம்.பி அருளானந்தன் | 5 - 6 |
| சைவ சமயமும்..... | வெ. சக்திவேல் | 7 - 9 |
| ஈழத்துச் சித்தர்கள்.... | மூ. சிவலிங்கம் | 10 - 12 |
| சிவபக்தியில் சிறப்புப்...... | நா. நல்லதம்பி | 13 - 15 |
| அன்புப் பிரவாகத்தில்..... | கு. மாலினி | 16 - 19 |
| திருமாங்கல்யத்தின்..... | ந. பாமதி | 20 - 21 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 22 - 24 |
| திருப்பாவையும்..... | பா. சிவனேஸ்வரி | 25 - 28 |
| மானுடத்தை மேன்மை..... | வ. குமாரசாமி ஐயர் | 29 - 32 |
| அருணகிரிநாதர் அருளிய.... | சி. வேலாயுதம் | 33 - 34 |
| அகவை எண்பதில்.... | காரை எம்.பி. அருளானந்தன் | - 35 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 36 - 37 |
| இறைவனுக்கு அஞ்சுவதே..... | கே. எஸ். சிவஞானராஜா | 38 - 39 |
| ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள்...... | | - 40 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 41- 44 |
| திருவாசக விழா | | 45- 48 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்ச்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406**

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ

# அப்படியென்ன இருக்குது - இந்தச் செல்வச் சந்நிதி யானிடம்

சாப்பாட்டு மேசையில் இருந்தங்கே - பெரும்
தடல் புடலாக உண் போரும்
இந்த ஏழை யடியவ ரோடிங்கே
ஒன்றா யிருந்து உண்டிட
அப்படி யென்ன இருக்குது - இந்தச்
செல்வச் சந்நிதி யானிடம்.

பட்டங்கள் பல பெற்ற போதிலும் - இந்த
வேலவன் சந்நிதி யானது
ஞான பண்டித......... என்றிடும்
பட்டமே மேலெனப் போற்றிட
அப்படி யென்ன இருக்குது - இந்தச்
செல்வச் சந்நிதி யானிடம்.

அயலிலே பல கோவி லிருப்பினும் - அங்கு
ஒரு பிடி அன்னமும் கொடுக்காத
கருமி களா யிருப்போரும் இங்கே
காசுடன் பொருளும் வழங்கிட
அப்படி யென்ன இருக்குது - இந்தச்
செல்வச் சந்நிதி யானிடம்.

பல்லாயிரம் ரூபா பேசியே - பெரும்
பகட்டான மேடையில் ஏறிடும்
விற்பன்ன ராயிருப்பினும் - இந்த
வேலனின் மேடையை நாடிட
அப்படி யென்ன இருக்குது - இந்தச்
செல்வச் சந்நிதி யானிடம்.

எத்தனை ஆலயம் சென்றாலும் - எம்
எண்ணம் போல் விரத மிருந்தாலும்
மாதத்தில் ஓர் முறையாயினும் - இந்த
மண்ணினை மிதித்திட வைக்கிறான்
அப்படி யென்ன இருக்குது - இந்தச்
செல்வச் சந்நிதி யானிடம்.

-கவிமணி. அன்னைதாஸன்-

உ

# ஞானச்சுடர்
# கார்த்திகைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

கார்த்திகைமாத மலருக்கான வெளியீட்டுரையை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள். நீண்டகாலமாக ஆச்சிரமத்துடனும் பேரவையுடனும் தொடர்பு கொண்டவரான திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் இங்கே இடம்பெறும் செயற்பாடுகளின் ஒழுங்குமுறைகள் கட்டுப்பாடுகள் என்பவற்றின் தனித்துவத்தையும் சிறப்புக்களையும் குறிப்பிட்டு அதனை ஏனைய நிறுவனங்களும் பின்பற்றி நடக்கக்கூடியவகையில் அமைந்திருப்பதைச்சுட்டிக் காட்டினார்கள்.

ஞானச்சுடர் சஞ்சிகை வெளிவருகின்ற ஒழுங்கு, அதன் உள்ளடக்கம், அதன் நோக்கங்கள், அதன் தனித்துவம் என்பவை எல்லாம் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு நல்ல உதாரணமாக இருப்பதையும் சபையினருக்கு எடுத்துக் கூறினார்.

## மதிப்பீட்டுரை:-

மதிப்பீட்டுரையை யாழ்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் வழங்கினார்கள்.

ஒரு ஆத்மீக சஞ்சிகைக்குரிய பல்வேறு சிறந்த அம்சங்களை ஞானச்சுடர் சஞ்சிகை கொண்டிருப்பதனை அடியார்களுக்கு எடுத்துக்காட்டினார்கள். சந்நிதியானது இடத்தில் இருந்து ஞானச்சுடர் வெளிவருவதனால் சந்நிதியானது கிருபையும் இதற்கு இருக்கின்றது என்பதையும் குறிப்பிட்டார்கள்.

சஞ்சிகையில் உள்ளடங்கியிருக்கும் விடயங்களைக்குறிப்பிட்ட விரிவுரையாளர் அவர்கள் தரமான சமுகத்தை வழிநடத்தக்கூடிய மக்களை ஈடேற்றக்கூடிய விடயங்கள் இடம்பெற்றிருப்பதை வரவேற்று கருத்து வெளியிட்டார்கள். மேலும் புதிய விடயங்களாக மாணவர்களை இணைக்கின்ற வகையில் மாணவர்களது ஆக்கங்களையும் உள்ளடக்குவது விரும்பத்தக்கது எனவும் தனது கருத்தை முன்வைத்தார்கள்.

சஞ்சிகையில் இடம்பெற்ற கட்டுரைகள்பற்றி அடியார்களுக்கு குறிப்பிட்டு அவைபற்றிய தனது மதிப்பீட்டினையும் வெளிப்படுத்தினார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

மனிதனது வாழ்வு நிரந்தரமற்றது. அந்த நிரந்தரமற்ற வாழ்வின் இடையில் வருகின்ற பட்டம், பதவி, அந்தஸ்து, அதிகாரம் என்பவை அதைவிட நிரந்தரமற்றது என்பதே வாழ்வியல் உண்மையாகும். ஆனாலும் எம்மில் பலர் அதனை உணர மறுக்கின்றோம்.

நிரந்தரமற்ற வாழ்க்கையின் இடையில் எமக்குக்கிடைக்கின்ற இந்தப் பட்டங்கள் பதவிகளைப்பயன்படுத்தி பாமரமக்களுக்கும், ஏழைகளுக்கும், ஏதிலிகளுக்கும் செய்யக்கூடிய அனைத்துச் சேவைகளையும் செய்யவேண்டியது படித்தவர்களதும் பதவிகளில் இருப்பவர்களதும் கடமையாகும். இவ்வாறு உதவிகள் ஒத்தாசைகள் என்பன தேவையானோருக்கு செய்வதற்கு இந்தப் பதவிகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்தவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

வாழ்க்கையில் எமக்குக்கிடைக்கின்ற பதவிகள் மற்றும் அதிகாரங்கள் போன்றவை எல்லாம் நாம் மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக இறைவனால் வழங்குகின்ற சந்தர்ப்பங்களாகவே நாம் கருத வேண்டும். பதவிகளில் இருந்து கொண்டும், அதிகாரங்களை வைத்துக்கொண்டும் நாம் கடமையைச்செய்கின்ற அதேவேளை அந்தக்கடமைக்கூடாக சேவைகளைச்செய்வதற்கும் நாம் எம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு பழக்கத்தை ஏற்படுத்துவதின் ஊடாக நாம் இயல்பாகவே மற்றவர்களுக்கு சேவை செய்கின்ற நிலைக்கு எம்மை மாற்றிக்கொள்ள முடியும்.

மேலும் மற்றவர்களுக்கு சேவை செய்கின்ற பதவிகளும் அதிகாரங்களும் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைக்கின்றவர்களும் எல்லாக்காலத்திலும் அதனை செயற்படுத்த முடிவதில்லை. பதவிகளையும் அதிகாரங்களையும் அனுபவிக்கின்ற காலத்திலேயே அதனை செயற்படுத்த முடியும். அந்த நிலைகளிலிருந்து அவர்கள் விடுபட்டபின்பு அவர்கள் நினைத்தாலும் மக்களுக்கான சேவைகளை அவர்களால் ஆற்றமுடியாது.

இந்தப்பந்தியை எடுத்துக்கொண்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் கடல் அன்னையின் இயற்கைச்சீற்றத்தினால் ஏற்பட்ட அழிவுகள் குறிப்பாக எமது கண்முன்னே எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவுகள் வாழ்க்கையின் அர்த்தத்தை எல்லோருக்கும் நன்கு வெளிப்படுத்துகின்றது.

ஆகவே அன்பேசிவம் என்ற எமது சமயக்கோட்பாட்டினைப்பின்பற்றி ஏனையவர்கள் எல்லோரிடமும் அன்புகொண்டு நாம் வாழ்கின்ற காலத்தில் எம்மால் முடிந்த சேவைகளை அனைவருக்கும் செய்வோமாக. ஏனென்றால் அவ்வாறு செய்கின்ற சேவையும், அந்த சேவைகளால் கிடைக்கின்ற தர்மமும் மட்டுமே எம்முடன் இறுதிவரைக்கும் வரக்கூடியவையாகும்.

உ

# மார்கழிமாத சிறப்புப் பிரதி
## பெறுவோர் விபரம்

***ஸ்ரீலஸ்ரீ S. சிவசண்முகானந்தக்குருக்கள்***
(வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு கொல்லங்கலட்டி)

***திரு அ. அரவிந்தன்***
(கல்வியங்காடு யாழ்ப்பாணம்)

***திரு சி. விஜயகுமார் (சந்திரன் கடை)***
(விநாயகர் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)

***திரு த. சிவசுப்பிரமணியம்***
(லீலா வெதுப்பகம், சங்கானை)

***திரு ஐ. சிவானந்தன்***
(கிராமசேவையாளர் வாதரவத்தை, புத்தூர்)

***திருமதி P. குகதாசன்***
(இலங்கை வங்கி, சுன்னாகம்)

***கலாபூசனம் வ. செல்லத்துரை***
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

***திரு சி. செல்வரெத்தினம் J.P***
(இளைப்பாறிய அதிபர், சிறுப்பிட்டி)

***திரு ம. அ. சரவணமுத்து***
(குகவாசம் வதிரி)

***திரு இ. சண்முகலிங்கம்***
(பிரதான வீதி, தொண்டைமானாறு)

***திரு நீ. மயில்வாகனம் J.P***
(வர்ணன், அச்சுவேலி)

***திரு S. சிவகுமார்***
(ஸ்ரீதேவி, ஆவரங்கால்)

***திரு ப. குணராசா***
(சர்வோதய வீதி, ஆவரங்கால்)

*திரு க. கிருபாநிதி*

(நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு)

*திரு க. பொன்னையா*

(ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி தெற்கு)

*திரு க. தங்கராசா*

(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

*திரு க. பரராஜவிருந்தம்*

(காவில் கரணவாய் தெற்கு)

*திரு V. சந்தனத்தேவன்*

(தூதாவளை, கரணவாய் தெற்கு)

*திரு பொ. ஞானப்பிரகாசம்*

(சித்தம்பாதி, கரணவாய் தெற்கு)

*திரு ந. ஜெயக்குமார்*

(கிளை முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி)

*தலைவர் / செயலாளர்*

(கலாநிதி ச. ச. நிலையம் நாவலம்பதி, அச்சுவேலி)

*திரு பொ. கந்தையா*

(பூரூடிலேன் அரியாலை)

*திரு R.V. கந்தசாமி*

(இளைப்பாறிய கால்நடை போதனா ஆசிரியர் யாழ்ப்பாணம்)

*திரு T.N. ராஜா*

(பொன் கிளர் பிரதான வீதி, சங்கானை)

*திரு V.S. கணபதிப்பிள்ளை*

(பிரதான வீதி, மானிப்பாய்)

*திரு V.S. மருதலிங்கம்*

(ஆலடிச்சந்தி, மானிப்பாய்)

*திரு மா. ஞானலிங்கம்*

(ஆசிரியர் அச்சுவேலி தெற்கு)

*திரு K. தர்மலிங்கம்*

(பாடசாலை வீதி, நம்பைக்குளம்)

*திரு வ. க ஸ்ரீதரன்*
(உடுவில் கிழக்கு, சுன்னாகம்)
*துணைவியூர் தி. கேசவன் ஆசிரியர்*
(வட்டுக்கோட்டை)
*திரு த. சுகந்தன்*
(அச்சுவேலி)
*திரு க. சண்முகலிங்கம்*
(முகாமையாளர் மக்கள் வங்கி அச்சுவேலி)
*அறங்காவல் சபை*
(வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்)

## கடல் கொந்தளிப்பால் காவு கொண்ட எமது உறவுகளே

என்ன நடக்கின்றது எது நடக்கின்றது என்பதை சிந்திக்க முடியாமலே 26-12-2004ல் நடந்த கடல் கொந்தளிப்பால் தமது இன்னுயிர்களை இழந்துள்ள எமது உடன் பிறப்புக்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமது குடும்ப உறவுகளையும் உற்றார் உறவினர்களையும் இழந்து துன்பம் தாங்காது தவித்துக்கொண்டிருக்கும் அனைத்து அன்பு நெஞ்சங்களின் துன்பங்களிலும் துயரங்களிலும் சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் பங்குகொள்ளுகின்றன.

அனைத்தையும் இழந்து உள்ளத்தாலும் உடலாலும் துன்பப்பட்டு ஏதிலிகளாக தவித்துக்கொண்டிருக்கும் எமது உறவுகளுக்காக ஆச்சிரமம் ஆரம்ப கட்டமாக உணவு வசதிகளையும், மருந்து வகைகளையும் உடுப்புக்களையும் நேரடியாகவும் சம்பந்தப்பட்டவர்கள் ஊடாக வழங்கிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் வழங்கவுள்ளோம்.

எல்லாம் அவன் செயல் என்பதனால் சந்நிதியானை வணங்கி அவன் திருப்பாதங்களில் எமது துன்பச்சுமைகளை இறக்கி அவனிடம் மன்றாடுவோம். எல்லோருக்கும் சாந்தி கிடைப்பதாக.

சந்நிதியான் ஆச்சிரமம்
சைவ கலை பண்பாட்டுப் பேரவையும்

உ

# 81-வது அகவை காணும் ஞானபண்டித கலாவித்தகி, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வழங்கும் வாழ்த்திதழ்.

**(பல்லவி)**

வாழிய வாழியவே, ஞான பண்டித கலாவித்தகி
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(வாழிய வாழியவே)

**(அநுபல்லவி)**

தெல்லி நகர்த் துர்க்கா தேவி உபாசகராய்த்
திரிகரண சுத்தியுடன் தெய்வீகப் பணிபுரிவோய்
நல்லோய்நின் தொண்டுநிலை நவிலுதற்கு வார்த்தையில்லை
ஞாலம் புகழ நன்மங் கலமாக
(வாழிய வாழியவே)

**(சரணம்)**

சமுதாயப் பணிகளென், சமயப் பணிகளென்ன,
தார்மீகப் பணிகளென்ன சகலவுக்கும் வழங்கிநின்றே
வமிசம் உளவரைக்கும் மங்காப் புகழ்படைத்தோய்
மங்களம் பலவாக வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
(வாழிய வாழியவே)

அர்ப்பண சிந்தையுடன் உடல்பொருள் ஆவியெல்லாம்
ஆத்மீக நெறிக்கென்னும் அருமந்த பூட்கையினோய்
சர்வ துறைகளுக்கும் தனித்துவமாய் வழங்கிநிற்போய்
சௌபாக் கியமாகச் சதாகாலம் வாழியவே.
(வாழிய வாழியவே)

வேதாந்த சித்தாந்த சமரச நோக்குடனே
வித்தகம் விளங்கிநிற்கும் மேலான மாதரசே
மேதா விலாசத்தை மென்மேலும் விளக்கிநின்றே
விமல துர்க்கா திருவருளால் வாழியவே.
(வாழிய வாழியவே)

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை
பண்பாட்டுப் பேரவையினர்.

உ

# "குருவாய் வருவாய்"
## ஸ்ரீ முருக மந்திரம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்



"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்பது தமிழ் மூதாட்டி ஔவையாரின் வாக்கு ஆகும். ஏகாந்த நிலையில் விளைந்த இன்பத்தை இன்னொருவர் அறியும்படி சொல்ல முடியாது. தாயானவள் தனது மகளுக்குத் தனது வாழ்வில் தான் அனுபவித்த அனைத்தையும் விளக்கிக் கூறமுடியாது. சிலவற்றை வாழ்வில் அனுபவித்த பின்பே உணர்ந்து கொள்ள முடியும். முகத்துக் கண்ணாற் பார்த்து எடுக்கும் முடிபுகள் யாவும் முழுமையாக அமைந்து விடுவதில்லை. அகக் கண்ணால், ஞானக்கண்ணால் அறிகின்ற பொழுதே உண்மைப் பொருளைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். இந்த உண்மையைத் தவயோகி திருமூல நாயனார் தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லுமின் சொல்லுமாறெங்ஙனம்"

ஆன்மா பொறிபுலன்கள் முதலிய கருவி கரணங்களில் இருந்தும் நீங்கித் தனியாக நிற்கின்ற அருளனுபவ நிலையை யாருக்கும் வார்த்தைகளால் விளக்கிக் கூற முடியாது. அடியவர்க்கு எளியவராகிய கந்தவேட் பெருமான் தன்னைத் தியானித்து வணங்கும் அடியார்களின் துன்பத்தைப் போக்குகின்றார். கருணை சூழ்ந்த பேரொளிப்பிழம்பாக விளங்குகின்ற ஞானவேற் பெருமான் ஒளி வீசுகின்ற வேலாயுதத்தைக் கையிலேந்தி

வெவ்வேறு வடிவங்களைத் தாங்கி, அடியார்களுக்கு அருளை வாரி வழங்குகின்றார். முருக அடியார்கள் அவருடைய திருவருளுக்குப் பாத்திரமாகி அகம் தூய்மை பெற்று ஞானத்தைப் பெறவேண்டுமே ஒழிய ஞானத்தினை ஒருவரும் மற்றவருக்கு உணர்த்திவிட முடியாது என்ற கருத்தினைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகின்றது.

"தன்னந் தனி நின்றது தான் அறிய
இன்னும் ஒருவர்க்கிசை விப்பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் கிருபை சூழ் சுடரே"

புத்தி கெட்டு விட்டாற் கெடுதி ஏற்படும். "கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். "விநாச கால விபரீத புத்தி" என்ற வடமொழிச் சுலோகமும் இதனைக் கூறுகின்றது. இன்பம் அறிவினால் உண்டாகும். துன்பம் அறியாமையால் உண்டாகும். அறிவை வளர்த்தால் துன்பம் தேயும். அறியாமையை வளர்த்தால் இன்பம் தேயும். விதியைக்கூட மதியால் வெல்லலாம். மதியிழந்து அதனால் வாடி வருந்தி வாழ் நாளை வீழ்நாளாக்கக் கூடாது. அறநெறியால் வரும் ஞான பண்டிதனின் திருவடி அனுபூதியை இழந்து வீணாக அழியக் கூடாது. அறநெறி நின்றாற் சிவகதி கிடைக்கும். பயன் கருதாது, ஈஸ்வர அர்ப்பணமாகப் பணி செய்பவர்கள் சிவகதி அடைவார்கள்.

நமது அறிவு சரியாகச் செயற்படுவதற்கு இறையருள் வேண்டும். தந்தைக்கே ஞானத்தை உபதேசித்த சுவாமிநாதனாகிய கந்த வேட்பெருமான் கங்கா நதியின் திருக்குமாரர், மெய்யறிவிற்கும் பேரின்பத்திற்கும் தலைவர், அசுரர்களின் வலிமையை அழித்த வீரபுருஷர், அடியேனின் அறிவும் சீராகச் செயற்பட வழிகாட்ட வேண்டும் என்று முருகப்பெருமானை வேண்டி நிற்பதை அநுபூதியின் ஐம்பதாவது பாடல் பின்வருமாறு விளக்குகின்றது.

"மதிகெட்டறவாடி மயங்கியறக்
கதி கெட்டவமே கெடவோ கடவேன்
நதி புத்திர ஞான ஏகாதிபவத்
திதி புத்திரர் வீறடு சேவகனே"

கந்தரநுபூதியாகிய ஞானத் திருக்கோபுரத்துக்கு மேல் வைத்த ஆயிரமாற்றுத் தங்கக் கலசம் போல ஒளி செய்யும் பாடலாக அநுபூதியின் ஐம்பத்தோராவது பாடல் திகழ்கிறது. திருவருட் பிரசாத அனுபவ ஞானத்

திருநூலின் சாரமாக அமைந்துள்ள பாடல் இதுவாகும். இறைவனுடைய சர்வ வியாபகத்தை விளக்கும் ஞானப் பாடல் இதுவாகும். இறைவன் உருவம், அருவம்.அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளிலும் காட்சி தருவான்.

"ஆருவுமாகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன். ஊழின்
கருமம் ஆகுவன், நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலர்"

எனக் கந்தபுராணம் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

பசு ஞானத்தாலோ அன்றேல் பாச ஞானத்தாலோ இறையருளை உணரமுடியாது. பதி ஞானத்தால் விளங்கும் இறைவனைப் பதி ஞானமில்லாதவர்களால் விளங்க முடியாது. உருவமாகவும் அருவமாகவும் இருக்கின்ற இறைவன் உள்பொருளாகவும் இல்பொருளாகவும் திகழ்வான். நறுமணம் உள்ள மலரிலிருந்து மணத்தினைப் பிரிக்க முடியாது. மணம் மலர் முழுவதும் பரவி அத்துவிதமாய்க் கலந்து நிற்கிறது. ஞானிகளின் அகத்திலும் இவ்வாறுதான் தெய்வ மணம் கமழும். இதனைப் "பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போற் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" எனத் தவயோகி திருமூல நாயனார் குறிப்பிடுகின்றார். "வாசமலரெலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். முருகப்பெருமானைத் "தெய்வ சிகாமணி" என அருளாளர்கள் அழைப்பார்கள்.

ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் ஆணவ இருளை அகற்றும் ஞான ஒளியாக ஞான பண்டிதன் திகழ்கின்றான். "ஓசை யொலி யெலா மானாய் நீயே" என்று அப்பர் பெருமான் குறிப்பிடுவதைப் போன்று மணியாகவும் அதன் ஒலியாகவும் நாதப் பிரம்மமாகவும் காட்சி தருகின்றான். உலகில் உள்ள இயங்கும், இயங்காப் பொருட்கள் அனைத்திற்கும் மூலமாக முருகப்பெருமானே இருக்கின்றார். உயிர் தங்கும் கருவாகவும் உயிர்க்குயிராகவும் விளங்குகின்றான்.

முருக விரதங்களிலே மிகச் சிறந்த தவமாக அடியார்களால் அனுஷ்டிக்கப்படும் விரதம் கந்தஷஷ்டி விரதம் ஆகும். நமது வினைகள் அனைத்தும் பொசுங்கவும் வேலவனின் அருள் கிடைக்கவும் கந்தஷஷ்டி விரதம் துணை செய்யும் ஈருலக வாழ்வுச் சிறப்பிற்கும் வேற்பெருமானின் திருவடிகளை இறுகப்பற்றி உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்குவதற்கும் முருகப்பெருமானின் அருட் பார்வை நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதை,

✡ ஒவ்வோர் இன்பத்துக்கும் ஒரு துன்பமுண்டு. ✡

"சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணும் நெய்த்த வடிவேலா"

என்ற அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாடல் விளக்கி நிற்கிறது. ஆன்மா வீடுபேறு அடைவதற்குரிய வழிகளாகக் குருலிங்க சங்கம வழிபாட்டினை எமது சமயம் எடுத்துக் கூறுகின்றது. பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவாக வந்து அருள் புரிவான். ஆன்மாக்களின் கருமேனி தீர்க்க வந்த திருமேனியே குருவடிவம் ஆகும். மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறையில் இறைவன் குருவடிவம் தாங்கியே ஆட் கொண்டார். "கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க" என மணிவாசகப்பெருமானே தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் இதனை வெளிப்படுத்துகின்றார். குருவருளின் சிறப்பினை மணிவாசகரைப்போல் அருணகிரி யாரும் அறிந்திருந்தார். முருக வேளிடம் நேரடியாக ஞான உபதேசம் பெற்ற பெருமை அருணகிரியாருக்கே உண்டு. அநுபூதிப் பாடல்களை மனம் உருகிப் பாடி முருகப்பெருமானிடம் அடியார்கள் வேண்டுதல் செய்தால் வீடுபேற்றிற்குரிய வழிவகைகளை நமக்குக் காட்டும் ஞானகுருவாக முருகப் பெருமான் வருவார் என்பதை முருக மந்திரத்தின் நிறைவாக இருக்கும் பின்வரும் ஞானப்பாடல் நமக்குத் தெளிவாக உணர்த்து கின்றது.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

நிறைவுரை:-

அகத்தையும் புறத்தையும் தூய்மையாக்கி நமது கருவி கரணங் களையெல்லாம் நெறிப்படுத்திக் கந்தவேட் பெருமானின் திருவருளைப் பெற நாம் நாள்தோறும் உச்சரிக்க வேண்டிய மந்திர மாலையாக இருக்கும் ஞானப்பெரு நூல் கந்தரநுபூதி ஆகும். முருக உபாசகர்கள் தங்களுடைய நித்திய பாராயண நூலாகக் கொள்ள வேண்டிய அருள் மணம் கமழும் நூல் இதுவாகும். முருகப் பெருமான் வீற்றிருந்து அருள் புரியும் ஆலயங்களை வழிபட்டு வரும் அடியார்கள் ஆலயத்தினுள் வீண் வார்த்தை எதுவும் பேசாது, ஓதி உணர்ந்து இறையருளைப்பெற வழிகாட்டும் தெய்வத் தமிழ்நூல் கந்தர்அநுபூதி ஆகும். அழகும், அற்புதமும், ஆனந்தமும் நிறைந்த ஞானபண்டிதன் நமது அகத்திலே இருந்து நாள்தோறும் ஞான ஒளி ஊட்ட உச்சரிக்கவேண்டிய செஞ்சொற்புனை மாலையாகிய மந்திர மாலையைத் தினமும் ஓதி ஸ்கந்த சாயுச்சியத்தை நாம் அனைவரும் பெறுவோமாக!.

✡ குறைந்த பேச்சு அதிக உழைப்பு. ✡

உ

# "திருவாசகத்தேன்"

மதுரகவி காரை எம். பி. அருளானந்தம் அவர்கள்

மாணிக்கவாசகர் சிவபெருமானைத் "தேன்" என்று கண்டு உணர்ந்து தெளிந்தவர் சிவபெருமான் அவருக்குத் தேனாய் இன்னமுதமுமாய்த் தித்தித்தான். ஆதலின் மாணிக்கவாசகர் சிவபெருமானை "அந்த இடைமருதில் ஆனந்தத்தேன்" என்றே பெயரமைத்துக் குறிப்பிடுவார். சிவபெருமானாகிய தேனை ஆரப்பருகி உண்ட மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில் ஆங்காங்கே சிவபிரானையும் அவனது திருவருளையும் 'தேன்' என்றே சிறப்பித்து வழங்கியருள்கின்றார்.

1) சிறந்தடியார் சிந்தையுள் தேன் ஊறிநின்று
2) தேசனே தேன் ஆர் அமுதே
3) கருணை வான் தேன்
4) தேன் நிலாவிய திருவருள்
5) தேனே அமுதே கரும்பின் தெளிவே
6) தேனைப், பாலைக், கன்னலின் தெளிவை
7) தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து
8) தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
9) தேனார் கமலமே சென்றூதாய்
10) தேன்புரையும் சிந்தையாய்
11) கண்ணகத்தே நின்று களிதரு தேனே
12) தழங்கருந் தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்துய்யக் கொள்ளாய்
13) தேனாய், இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
14) சிவன் கருணைத் தேன் பருகி....

இங்ஙனம் இறைவனையும் அவனது அருளின் திறனையும் மணிவாசகா ஆங்காங்கே தேன் எனவே பலகாலும் திருவாசகத்தின் கண் சிறப்பித்து குறிப்பிடுதலின் அதனை ஓதி உணர்ந்து உவந்த சான்றோர்கள் அனைவரும், திருவாசகத்தினையே தேன் என்று குறிப்பிட்டுப் பாராட்டிச் சிறப்பிப்பாராயினர்.

"தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும்தேன்"

வாழ்க்கை நீடிக்கும் வரை நம்பிக்கையும் இருக்கும்.

உடற்பிணிகள் பலப்பல போக்கி, நமக்கு நலங்கள் பலப்பல விளைவிப்பது தேன், அதுபோல நம் உயிர்ப்பிணிகள் பலவற்றையும் போக்கி நமக்கு இறையருள் நலம் கிடைக்கத் துணை புரிவது திருவாசகம் என்னும் தேன்.

இறைவனின் திருவடிகள் தாமரை மலர்கள், அவற்றை இடையறாது இறைஞ்சி, வழுத்திய மணிவாசகர் அத்தாமரை மலர்களிற் படிந்த வண்டு அவர்தம் இன்னிசைத் துதியே வண்டின் மிழற்சி இறைவனின் திருவடிகளில் ஈடுபட்டு மணிவாசகர் நுகர்ந்த இன்பமே தேன். மணிவாசகராகிய வண்டு இறைவனின் திருவடியாகிய தாமரை மலரிற் படிந்து நுகர்ந்த இன்பமாகிய தேனை, அனைவரும் இனிது அருந்தி உவந்து உய்தி பெறும்படி ஒருங்கே திரட்டி வைத்த பெரும் தேன்கூடு போல்வதே திருவாசகச் செந்தமிழ்த் தெய்வமாமறை என்று நாம் சுருங்கக் கூறிக் குறிப்பிடுதல் பொருந்தும்.

"தினைத்தானை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
நினை தொறும் காண் தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத் தெலும்பு உள் நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையாறுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மணிவாசகர் இறைவனைப் பற்றிப் பாடுவது போலவே திருவாசகமும் நாம் நினை தொறும், பேசுந்தொறும், ஓதுந்தொறும் நம் உள்ளத்தில் ஆனந்தத்தேன் சொரியும் அளவிலாப் பெருஞ்சிறப்பு உடையதாகும்.

## ஏழை கேட்ட வரம்

காட்டுவழி சென்ற ஏழை, ஒரு ரிஷியைப் பார்த்தான். அவர், குபேர மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். அந்த ஏழை, குபேர மந்திரத்தை இடைவிடாது ஜபம் செய்தான். குபேரன், ஏழையின் முன் காட்சியளித்து, "உனக்கு என்ன வரம் வேண்டுமோ, அதனைக் கேள்" என்றான். அந்த ஏழை, "எனது மாட்டுக்கு நான்கு படி தவிடு கொடு" என்று கேட்டான். "எனக்கு மோட்சத்தைக் கொடு; பெருஞ் செல்வத்தைக் கொடு" என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்!

இதுபோலவே, தியானம் செய்கிற சில பக்தர்கள், உலகின் சில சில்லறைப் பொருட்களைத் தருமாறு இறைவனை வேண்டுகின்றனர்.

*அற்பமான உலகியற் பொருட்களுக்காகப் பிரார்த்தனை செய்யாதே.*

-ரமணர்-

கேட்கத் தயங்கி எதையும் இழக்காதே.

உ

# "சைவசமயமும் விஞ்ஞானச் செழும் புதையல்களும்"

டாக்டர் வெற்றிவேல். சக்திவேல் அவர்கள்

ஒருவன் முழுமனிதனாகத் திகழ்வதற்குச் சமயமும், விஞ்ஞானமும் இரு கண்களாகத் திகழ்கின்றன. இன்று நாம் அவசர விஞ்ஞான யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கு பார்த்தாலும் அவசரம் எதிலும் அவசரம், காணப்படுகின்றது. மனிதன் இயந்திரமயமாகி வருவதைப் பார்க்கும் போது மனிதன் மனிதனாக இருக்காது இயந்திரமாக மாறிவிடுவானோ என்று ஏக்கம் கொள்ளும் நிலையை இன்றைய நவீன விஞ்ஞானம் நமக்குப் பரிசாக தந்திருக்கின்றது. சமயமானது மனிதனது உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அமைதியான, சாந்தமான உள்ளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால் அதில் மிகையொன்றுமில்லை. ஆனால் எமது சைவசமயமானது சமய தத்துவம், நடைமுறைக்கப்பாற்சென்று விஞ்ஞானக் கருத்துக்களை, விஞ்ஞானச்செழும் புதையல்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் சிறப்பார்ந்த சமயமாகத் திகழ்கின்றது. இந்த வகையில், சைவசமயத்திற் பொதிந்து காணப்படும் விஞ்ஞானக் கருத்துக்களை ஆராய்வது காலத்தின் தேவையாக அமைகின்றது.

ஐம்பூத அணுக்களில் யாதாவதொரு பூத அணுவானது நிலையான சக்தியிலிருந்து (Potential energy) சலன சக்தியை (Kinetic energy) அடையும் போது அந்தப் பூத அணுவானது அருவுருநிலையிலிருந்து பெரிதாகி உருவப் பொருளாக மாறும் நிலையைப் பஞ்சபூதப்பைஞ்சீகரணம் என்று இந்துதத்துவம் குறிப்பிடுகின்றது. நவீன விஞ்ஞானக் கருத்துப்படி அணுக்களிடையே மோதலும், இணைதலும், பிரிதலும் ஆகிய நிகழ்வின் போது அதிர்வுகளினால் ஒலி ஏற்படுகின்றது. உலகத் தோற்றத்துக்கும் அணுக்களின் அதிர்வு அவசியமாகக் கருதப்படுகின்றது. இதே போன்று அணுக்களால் ஆகிய உலகத்தோற்றத்துக்கு அதிர்வை அடிப்படையாகக் கொண்ட ஓங்கார ஒலி அவசியம் என இந்துதத்துவம் வலியுறுத்துவது அணுக்களிடையே நடைபெறும் தாக்கங்களிற்கு அதிர்வலைகள் அடிப்படையாக அமைகின்றன என்பதைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. சடப்பொருள் பலவற்றுக்கும் அலகாகிய அணுக்களின் அசைவு ஒலி அதிர்வைத்தரும். "ஓசை

ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுவது சிவ தாண்டவமானது அணு அதிர்வின் அடிப்படையில் அமைந்த சக்தி மாற்றத்தினைப் புலப்படுத்தும் தோற்றப்பாடு என்பதை அறியக் கூடியதாயுள்ளது.

ஆதியும் அந்தமும் இல்லாதவன் இறைவன் என்று சைவசமயம் கூறுகின்றது. விஞ்ஞான கணித தத்துவமும் அதி உயர் பெறுமானம் உடையதையும் மிகக் குறைந்ததையும் முடிவிலி, என்று கூறி ஆதியும் அந்தமும் இல்லாத முடிவிலியை நம்பித்தான் தனது ஆய்வை ஆரம்பிக்கின்றது. பராசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனப் பல நிலைகளில் வைத்து இந்து சமயம் போற்றுகின்றது. நவீன விஞ்ஞானமும் மின்சக்தி, வெப்பசக்தி, ஒளிசக்தி, ஒலிசக்தி எனச் சக்தியைப் பல்வேறு நிலைகளில் வைத்து ஆராய்கிறது.

சைவ ஆலயங்களிற் பயன் படுத்தப்படும் சாம்பிராணி, சந்தனம், மஞ்சள், குங்கிலியம், வெற்றிலை, மிளகு, அறுகு, கராம்பு போன்றன தொற்று நீக்கி மூலிகைகளாகப் பிரதானமாக பயன்படுத்தப்படு கின்றன. மஞ்சளில் Resin, Curcumin, Camphor போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதால் தொற்றுநீக்கியாகக் காணப்படுகின்றது. சந்தனத் தில்Santalol, Volatile Oil போன்ற பதார்த்தங்கள் கிருமிகளைக் கொல்லும் தொற்றுநீக்கிகளாக அமைகின்றன. சாம்பிராணியில் பென்சோயிக்கமிலம், போமல்டிகைடு, Oxidising and diastatic enzymes போன்றன காணப்படுவதால் தொற்று நீக்கும் தன்மையை உடையதாகக் காணப்படுகின்றது. வெற்றிலையில் Arakene, terpene, sesquiter pene, Allyl pyro catechol, cineol, eugenol, caryophyllene போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதோடு தொற்றுநீக்கித் தன்மையும் காணப்படுகின்றது. மிளகில் acrid resin, oleoresin, volatile oil போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதால் தொற்றுநீக்கித் தன்மை காணப்படுகின்றது. அபரக்கிரியை முடித்து வருபவரை வேப்பிலையை மெல்லும்படி கொடுப்பது வழக்கம். இதில் Paraisine, Margosine, Azaridine Margosic Acid போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதோடு சிறந்த தொற்று நீக்கியாகவும் காணப்படுகின்றது. குங்கிலியம், தேன் மெழுகு, சுக்கான்கல், கொம்பரக்கு, நாற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் என்பவை அஷ்ட பந்தனத்துக்குரிய திரவியங்க ளாகும். இவற்றில் சாதிலிங்கம், குங்கிலியம், நாற்காவி போன்றவற்றில் கிருமித் தொற்றுநீக்கித் (Antiseptic and

Antibiotic) தன்மை காணப் படுகிறது. இவ்வாறு பல்வேறு கிருமிகளுக்கெதிராகப் பயன்படும் தொற்றுநீக்கிப் பொருட்கள் ஆலயங்களிற் பயன்படுத்தப்பட்டுச் சுகவாழ்வு பேணப்படுகிறது.

உருத்திராக்கமானது காந்த ஆற்றல், மின் ஆற்றல் உடையதாகக் கருதப்படுகின்றது. இதை அணிவதால் உடற்பொலிவும், உடற் பலமும் பெருகுவதுடன் நோய் அணுகாது எனவும் கூறப்படுகின்றது. மேலும் திருநீறு, உருத்திராக்கமாலை போன்றன அணிவதனால் இறைவன் எம்மோடு உள்ளான் என்ற உணர்வையும் உளத்தைரியத்தையும் மேம்படுத்தும் முறைகளாக அமைகின்றன. தீப அலங்காரம், பண்ணிசை, மங்கள இசை ஆகியனவும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி உள ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் நடைமுறைகளாகக் கொள்ளலாம். ஆலயங்களிற் பயன் படுத்தப்படும் மலர் அலங்காரமானது கருத்துக்களையும் உணர்ச்சி களையும் மௌனமாகக் குறியீட்டு வடிவிற் புலப்படுத்துவதோடு சூழலுக்குத் துலங்கல், சூழலை துலங்கச் செய்தல் என்ற அணுகு முறைகளுடன் ஆழ்ந்த மன உணர்வுகளையும் வெளிக்கொணரும் உளச்சிகிச்சை முறைகளுள் ஒன்றாக மேலை நாட்டு உள நிபுணர்களால் கருதப்படுகின்றது.

இந்துக்கள் தம் வீட்டிற் குழந்தை பிறந்தால் ஒரு மாத காலம் வரை தொடக்கு எனக் கூறுவர். தொடக்கு என்ற காரணத்தினால் நோயாளர் உட்பட அதிகமானோர் பிறந்த பிள்ளையையும், தாயையும் சென்று பார்வையிடுவதைக் குறைக்கக் கூடியதாயுள்ளது. இச்செயன் முறையானது பிறந்த குழந்தையை நோயாளர்கள் தூக்கி விளையாடுவதையும் காப்பத்தினாற் பலவீனமடைந்த காப்பிணித்தாயையும் நோயாளர் உட்படப் பார்வை யிடுவதைத் தடுப்பதனால் (Isolation) நோய் நிலைத் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் ஒரு முதல் நிலை தடுப்பாகக் (Primary Prevention) கருதப்படுகின்றது. தமிழும் சைவ சமயமும், தமிழர் மருத்துவமும் ஒன்றோடொன்று இணைந்து தமிழரின் வாழ்க்கையை வளம்பெறச் செய்கின்ற முறைமையினால் இந்து தத்துவத்தின் விஞ்ஞான ஆய்வுகள் இக்காலத்தில் முதன்மையான தேவைகளில் ஒன்றாகக் கருதவேண்டியுள்ளது.



லாபமும் நஷ்டமும் இரட்டை சகோதரர்கள்.

உ

# ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் அவதரித்த இணுவில் பெரிய சந்நியாசியார்

திரு மு. சிவலிங்கம் அவர்கள்



இணுவில் பெரிய சந்நியாசியார் இணுவில் கோண்டாவில் காரைக்கால் பதியமர்ந்த மாரியம்மன் தாயுருவில் வந்து தந்த திருவமுதுண்டு சித்தரானார். காரைக் காலில் 1008 மரங்களை நாட்டியவர். ஏழு திருக்குளங் களையும் வீதியில் அமைத்தவர். உலகப்பிரசித்தி பெற்ற பெரிய சித்திர மஞ்சத்தை இணுவில் கந்தனின் வேண்டுதலின்பேரில் நிறைவேற்றியவர். இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து காரைக்கால் சிவன் பதிக்கு ஏழு தேர் செல்லவும் ஏற்ற 32முழ அகலம் கொண்ட பெருவீதி அமைத்தவர். சக்தியின் அருளால் முக்காலமும் உணர்ந்தவர். திருநீறு கொண்டு மணிமந்திரம் ஓதி, மாறாத கொடிய நோய்களையும் தீர்த்தவர். தமது சமாதிக்காலம் வந்ததும் சமாதிக்கான கிடங்கு அமைத்துச் சமாதியானவர். இவரது சமாதியின் மீது அமைந்ததே மஞ்சத்தடி அருணகிரிநாதசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலாகும்.

ஏழிசை வாழ்ந்திடும் இணுவை யம்பதியின் தென்மேல் திசையில் பிரசித்தி பெற்ற பரராச சேகரப் பிள்ளையாரும், மேல் திசையில் பெரிய கோயிலிலுறையும் இணுவில் கந்தப் பெருமானும், செகராசசேகரப் பிள்ளையாரும், வடபால் சுந்தர ஆஞ்சநேயரும், பல்லப்பை வைரவரும், கீழ்த் திசையில் காரைக்கால் சிவனும், இணுவில் சிவகாமி அம்பாளும் இங்கு அருள் பாலிக்கின்றனர். பல சித்தர்களும், அருளாளர்களும், ஆன்மீக வாதிகளும், செந்தமிழைக் குருகுல முறைப்படி கற்ற பாவலரும், நாவலரும் தோன்றிய இணுவில் என்றும் பல சீர்சிறப்புக்களும் தொன்மையும் கொண்ட பண்பாடான கிராமமாகும். இணுவில் மக்கள் தெய்வீக சக்தியால் வாழ்வாங்கு வாழ்ந்து புதிய சரித்திரம் படைத்தவர்கள். இவர்களுள் கந்தர்-தெய்வானை தம்பதியர் முன்செய்த தவப்பயனாக வந்தவதரித்தவர் சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட பெரிய சந்நியாசியார். இத்தவசீலர் 1860 ஆம் ஆண்டு எமது கிராமத்தின் விடிவெள்ளியாகவே தோன்றினார். இவரது பெற்றோர் பரம்பரையான விவசாயப் பெருங்

குடியினர். விசாலமான விளை நிலங்களும் நிறைந்த ஆநிரைகளும் இவர்களது பாரம்பரியச் சொத்தாகும். சுப்பிரமணியம் இளமையில் ஏட்டுக் கல்வியை நாடவில்லை. தமக்கு விருத்தெரிந்த காலம் முதல் இறைவழிபாட்டிலும் தியானத்திலும் மூழ்கியிருந்தார். பொழுதுபோக்காகப் பெற்றோரின் கமபுலத்தில் உதவுவதும் தமது பெற்றோரின் ஆநிரைகளை காரைக்காலுக்கு அழைத்துச்சென்று மேயவிடுவதும் வழக்கம். ஆநிரை மேய்க்கச்செல்லும் தமது தவப்புதல்வனுக்குத் தாயார் மதிய உணவை எடுத்துச்சென்று கொடுப்பார். மாலைப்பொழுதில் ஆநிரைகளை வீட்டுக்கு அழைத்து வருவார். வழமைபோல ஒருநாள் காரைக்காலில் ஆநிரைகள் மேயவும் கொடூர வெயிலின் வெப்பமும், அன்று தாயாரின் மதிய உணவு வரப்பிந்தியதால் ஏற்பட்ட கடும்பசியும் இவரை காரைக்கால் மாரியம்மன் சூழலில் உள்ள மரநீழலிற் படுத்துறங்க வைத்தது. திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்த உலகமாதா தமது பிள்ளையாகிய சுப்பிரமணியம் பசியால் உறங்க விடுவாளா? சுப்பிரமணியத்தின் தாயினுருவில் வந்த மாரியம்மன் இவரது தாயார் பரிமாறுவது போலத் திருவமுது தந்து பசியாற்றியதும் மறைந்தருளினார். சிறிது நேரத்தில் இவரது தாயார் வழமைபோலக் கட்டுச்சோற்றைத் தலையிற் சுமந்து கொண்டு வந்து மகனிடம் கொடுத்தார். திருவருள் கைகூடவும் தான் உண்ட உணவு உலகமாதாவான மாரியம்பாளின் திருவிளையாடலே யென உணர்ந்தார். ஆடினார், பாடினார், ஓடினார். பரவச நிலையில் தமது தாயாரிடம் வந்து தமக்குத் திருவமுது வழங்கிய ஆதிபராசக்தியின் திருவிளை யாடலைப் புகழ்ந்து உரையாடினார். தாயாரும் மாரியம்பாளின் பெருமைகளை எண்ணி அக மகிழ்ந்தார்.

உலகமாதாவான மாரியம்மனின் கையால் வழங்கிய திருவமுது உண்ட சுப்பிரமணியம் தெய்வ அருளால் சித்தரானார். முக்காலத் தையும் உணர்ந்தார். இவரது புகழ் திக்கெட்டும் பரவியது. தம்மை நாடிவந்தவர்களுக்குச் சிவசின்னமாம் திருநீறு எடுத்து மணிமந்திரம் ஓதி உடற்பிணி, உளப்பிணி யாவற்றையும் போக்கினார். பெரிய வைத்தியசாலை, தனியார் வைத்தியசாலை வைத்தியர்கள் கவனித்தும் மாறாது கைவிடப்பட்ட நோயாளிகளைத் தமது சித்த மகிமையாற் சுகப்படுத்தினார். சக்தியின் அருளால் திருவாக்குச் சொல்லி நலிவுற்றோருக்கு ஆறுதல் அளித்தார். மூலிகைகளைக் கொண்டு சித்த வைத்தியத்தையும், விஷகடி வைத்தியத்தையும் சிறப்பாகக் கையாண்டார்.

தமது வைத்தியத் தேவை களுக்கான மூலிகை மரங்களுடன்

கனிதரும் மரங்கள், நிழல்தரும் மரங்கள் உட்பட 1008 மரங்களை நாட்டினார். மரங்களுக்கு நீரூற்றவும், கால்நடைகள் நீர்பருகவும் காரைக்காற் பதியில் ஏழு திருக் குளங்களையும் வெட்டுவித்தார். இவ்வரிய திருப்பணிகள் யாவும் பெரியாரின் தலைமையிற் கூடிய தொண்டர்களின் சிரமதானப் பணியாகும். திருவருளும், இயற்கையும், தொண்டர்களின் செயற்பாடும், பெரியவரின் சித்து விளையாடலும் நலமே கைகூடவே காரைக்காற்பதி அழகான சோலைவனமாகியது.

சிவனின் திருக்கோயில் அபிவிருத்தி நோக்கிய சந்நியாசியார் தமக்குத் திருவமுது வழங்கிய அன்னை மாரியம்பாளுக்கும் வைரவருக்கும் தனியான கோயில்களை அமைத்தார். ஏற்கெனவே இருந்த புற்றுமண்ணாலும் செடிகொடிகளாலும் மூடப்பட்டிருந்த காரைக்கால் விஸ்வநாதப்பெருமானின் மூலலிங்கத்தைச் சுத்தம் செய்ய எண்ணினார். இவரது தொண்டர்கள் வேலையைத் தொடங்கினர். சிவனின் காவலுக்காக இருந்த விஷப்பாம்பு களின் கூட்டம் தொண்டர்களை வேலை செய்யவிடாது துரத்தின. தொண்டர்கள் பெரியவரிடம் வந்து முறையிட்டனர். நிலைமையை ஞானநோக்கில் உணர்ந்து பொது மக்களின் வணக்கத்துக்காகவே இவ் விடம் சுத்தம் செய்யப்படுவ தாகவும், மக்கள் தொடர்ந்து சுத்தம் செய்து புனித வழிபாடு செய்வதாகவும் இறைவனுக்கு விண்ணப்பித்தார். பாம்புக்கூட்டம் விலகிச்செல்ல கால அவகாசம் வழங்கப்பட்டது. தொண்டர்கள் தமது பணியை இரு வாரங்கள் செல்ல ஆரம்பிக்கலா மென்று தெரிவித்தார். மூல லிங்கத்தைச் சூழவிருந்த சகல பாம்புகளும் கூட்டமாக அவ்விடத் திலிருந்து சென்று மறைந்தன. குறிப்பிட்டபடி இருவாரங்களின் பின் துப்புரவுப்பணியை எதுவித சிரமமுமின்றிச் செய்து முடித்தனர். கோயில்புனருத்தாரணஞ் செய்யப் பட்டது. இந்தப் புனிதமான இடத்தில் அருள்பாலிக்கும் காரைக்கால் விஸ்வநாதப்பெருமான் மூலலிங்க வடிவில் நாற்புறமும் வெவ்வேறு அழகிய கோலங்காட்டும் இறைவனின் திருமூர்த்தங்களை உடையதாகவும் ஐந்தடி உயரங் கொண்ட மிகப் பிரமாண்டமான சிலை அமைப்பாகும். இச் சிலை வடிவம் யாரால், எப்போது அமைக்கப்பட்டதெனப் பதிவேட்டில் இல்லாத மிகப் புராதன அமைப்பாகும். இவ்வமைப்பான பஞ்சலிங்க மூர்த்தம் வேறெங்கும் காணபதரிது. (தொடரும்...

---

கசப்புப்பொருளாயினும் அதனைக் கற்கண்டாகக் கருதி உட்கொள். அதனால் மெய்ப்பதம் காண்பாய்.

சந்நிதியான்
(தொடர்ச்சி..

உ

# சிவபக்தியில் சிறப்புப் பெற்ற சிவனடியார் மூவர்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

## திருநீலகண்ட நாயனார்

கற்புடைய, கட்டியமனைவி யாகிய தான் வீட்டிலிருக்கவும் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்பது தெரிந்து கொண்ட திருநீலகண்ட நாயனாரின் நாயகியார், இதற்கு ஒரு முடிவுகாண வேண்டும் என நினைத்து, "இனிமேல் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என ஆணையிடு கிறார்.

தேவர்கள் அழிந்து போவார் களே என்பதனால், பொங்கிவந்த ஆலகால விஷத்தைத் தானே உண்டு திருநீலகண்டர் ஆனவர் சிவபெருமான். அந்தத் தன்மையினாலே, தன்னை அழிவில் இருந்து காப்பாற்ற வல்லவர் திருநீலகண்டராக நாமம் பெற்றவரே எனத் தெளிந்து, எப்பொழுதும் "திருநீலகண்டம்" என்று சிறப்பித்துச் சொல்லும் வழக்கம் உடையவர் என்பதனால் இவருக்குத் "திருநீல கண்டநாயனார்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர் சிறப்பாகச் சொல்லிக்கொள்ளுகின்ற "திருநீல கண்டம்" என்ற சொல்லால் ஆணை பிறந்ததும் திருநீலகண்டர் அதிர்ந்து போகிறார்.

ஒருவர் வழிபடுகின்ற கடவுளின் பெயரால் அவரோ அல்லது மற்றவரோ சத்தியம் செய்தால் அதனை இருபகுதியாரும் மீற மாட்டார்கள் என்பது உலக வழக்காய் இருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும், "எம்மைத் தீண்டுவீராகில் பன்மையில் சொன்னபடியால், திருநீலகண்டராகிய இறைவனது பக்திமையால், அன்று முதல் தமது மனையாளை மாத்திர மன்றி, வேறு பெண்களையும் மனதினாற் கூடத் தீண்டாமல் வாழ்கிறார் திருநீலகண்ட நாயனார்.

ஆயினும், வெளியுலகம் இவர்களது சத்தியவிரதம் பற்றி எதுவும் அறிந்து கொள்ளாத வண்ணம் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறான சபதத்தோடு இளமைப்பருவம் கடந்து மூப்படைந்து பிணிவரப்பெற்ற நிலையிலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள், சபதம் மாறவில்லை!

எல்லாம் அறிபவரான, கருணைக்கடலான சிவபெருமான், வீணாகக் கழிந்த இவர்களது

ஆர்வம் உடையாரே ஆர்வத்தைத் தூண்ட முடியும்.

தாம்பத்திய இளமைக்காலத்தை மீளக் கொடுக்கத் திருவுளங் கொள்ளுகிறார்.

திருநீலகண்ட நாயனாரது குலத்தொழில் மட்பாண்டங்கள் வனைவது. சிறப்பாக இவர், சிவனடியார்களுக்கு வேண்டிய திரு ஓடுகளைச்செய்து கொடுப்பதை வழக்கமாக உடையவர். அதன் பொருட்டு அவருக்கு அனுக்கிரகம் செய்யத் திருவுளங்கொண்ட இறைவன் ஒரு சிவயோகியாராகித் திருவோடு தாங்கி அங்கே செல்கிறார். திருநீலகண்டர் அவரை வரவேற்று முறையான உபசாரஞ் செய்ததன் பின் வந்த காரியம் யாதென வினாவுகிறார். சிவனடியார் தாம் கொண்டு வந்த திருவோட்டைத் திருநீலகண்டரிடந்தந்து, அதனைப் பாதுகாப்பாக வைத்திருந்து தாம் கேட்கும் நேரம் திருப்பித் தருமாறு கேட்கிறார். "இந்த ஓடு மிகவும் பெறுமதி வாய்ந்தது, கவனம்" என்று கூறி விடைபெறுகின்றார் அந்தச் சிவயோகியார். சில தினங்களில் அந்த ஓடு மறைந்து விடுகிறது! திருநீலகண்டர் அதனை அறியார்.

ஒருநாள், தாம் கொடுத்த அத்திருவோட்டைப் பெறும் பொருட்டுச் சிவயோகியார் அங்கே வருகிறார். தாம் வைத்த இடத்தில் ஓடு இல்லாது போகவே, ஏக்கங்கொண்ட திருநீல கண்டர், அதற்காக மன்னிப்புக்கேட்டு, வேறு ஓடு தருவதாகக் கூறவே, சிவயோகியார் அதற்கு உடன்படவில்லை. பொன்னோடு தந்தாலும் பெறேன், நான் தந்த அதே ஓடுதான் வேண்டும் என்கிறார்.

"சுவாமி, நான் அந்த ஓட்டைக் கவர்ந்தவன் அல்லேன், என்ன செய்வதென்றே விளங்கவில்லை" என்கிறார். "அப்படியானால், நீர் உம் புத்திரன் கையைப் பிடித்துக்கொண்டு குளத்திலே முழுகி வந்து சத்தியம் பண்ணும்" என்கிறார் சிவயோகியார். அவ்விதம் செய்வதற்கு எனக்குப் புத்திரபாக்கியம் கிட்டவில்லையே என்று திருநீலகண்டர் கூறுகிறார்.

சரி, உமது மனைவியார் கையைப்பிடித்து அவ்விதம் சத்தியம் பண்ணலாமே என ஏவி நிற்கும் சிவயோகியாரிடம், எங்களுக் கிடையில் ஒரு சபதம் இருப்பதால் நான் மாத்திரம் நீராடிவந்து சத்தியஞ் செய்து தருகிறேன் என்று சொன்னதும் சிறிது கோபங் கொண்டவர்போல நடித்துச் சென்று தில்லைவாழ் அந்தணர் சபையிலே முறையிடுகின்றார் சிவயோகியார்.

இன்று இயங்குகின்ற நீதி மன்றங்களிலே தீர்ப்பு உடனே வழங்கப்பெறுவதில்லையே. ஆனால் அக்காலத்தில் நீதி மன்றங்களாகச் செயற்பட்ட அந்தணர் சபையானது, சிவயோகியார் சொல்வது போலச் செய்யும்படி தீர்ப்பு வழங்கியது.

ஓட்டைத் திருப்பித்தரவும் மாட்டீர், சத்தியம் பண்ணவும் மாட்டீர், அப்படியானால்.... உடனே திருநீல கண்டர் ஒரு தடியின் ஒரு பக்கத்தில்

உழைக்கக் கற்றபின் பொறுமையையும் கற்க.

தானும் மறுபக்கத்தில் மனையாளும் பிடித்து நீராடப் போகவே, அவ்விதம் செய்வதனைச் சபையார் ஏற்றுக் கொள்ளாமல், கையைப் பிடிக்கும்படி வற்புறுத்தினார்கள்.

திருநீலகண்டர் தமக்கிடையில் உள்ள சபதம் பற்றிக் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே என்று சபையோர் அறியக்கூறிய பின் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் இறங்குகின்றார்.

என்னனே புதுமை! அவ்விதம் நீராடி வெளியேறும் போது பிணியும் மூப்பும் நீங்கி இளமைப் பருவத்தினராய் அவர்கள் காணப்பட்டார்கள். தேவர்கள் பூமாரி சொரியச் சிவபெருமான் உமாதேவியாரோடுங் காட்சி தந்தருளினார். திருநீலகண்டநாயனாரும் அவரது அன்பு மனையாளும் தில்லைவாழ் அந்தணர்களும் இறைவன் திருவிளையாடலை எண்ணி பக்தி பரவசத்தோடு வணங்கி நின்றனர்.

"ஐம்புலன்களையும் வென்று மேன்மை பெற்ற அன்பர்களே, என்றும் குன்றாத இளமையோடு நம் பக்கல் இருங்கள்" என்று அசரீரி ஒலி கேட்கிறது.

சிவனன்பின் வலிமையினால் சிற்றின்பத்தையும் வென்ற திருநீலகண்ட நாயனாரும் அவரது துணைவியாரும் என்றும் பேரின்ப நிலையில் வாழும் பேற்றினைப் பெருகின்றனர்.

(தொடரும்.....

## வாசகர் உள்ளத்திலிருந்து

அன்புடையீர்!

ஞானச்சுடர் மலர் தொடர்ந்து ஆர்வத்துடன் படித்து வருகிறேன். எங்கள் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கும் மலரை படித்து பயன்பெறும் வாய்ப்பையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறேன். எங்கள் தமிழ்க் கடவுளின் சிறப்புக்களை அழகு தமிழில் சுவைபட வெளிப்படுத்தி வருகிறீர்கள்.

முருகப்பெருமானுக்கு நீங்கள் ஆற்றிவரும் தொண்டு எங்களை மிகவும் பெருமிதம் அடைய வைக்கிறது.

என்றும் அன்புடன்
நாக. ரமணன்

**SHRI SHIVA VISHNU TEMPLE**
52 Boundary Road, Carrum Downs, Victoria 3201, AUSTRALIA

உ

# அன்புப் பிரவாகத்தில் பெரியபுராணம்

செல்வி மாலினி குணரத்தினம் அவர்கள்

அண்ட சராசரங்களின் இயக்கத்திற்கு மூல காரணம் அன்பாகும். ஐந்தறிவு படைத்த விலங்குகள் தொடக்கம் ஆறறிவு படைத்த மனிதர் வரை அன்பு என்பது பொதுவான வற்றாநதி. அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை எமது கண்ணீரே அன்புப் பிரவாகத்தை வெளிப்படுத்திவிடும். இதனை வள்ளுவர்

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன் கணீர் பூசல் தரும்"

என்கிறார். அன்பாளர்களின் அருள் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம். அவர்களின் அன்பு உள்ளத்தை அறுபத்து மூவரில் ஒருவரான திருமூலர்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

என அன்பும் சிவமும் ஒன்றே ஆகும் என்கிறார். பெரியபுராணத்தில் அடியவர்கள் கண்ட அன்புநெறியானது மக்கள்மேல், எதிரிகள்மேல், அடியார்கள்மேல், விலங்குகள்மேல், இறைவன்மேல் என நீண்டு செல்கிறது. இவ் அன்பின் ஆழத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கச் சில ஆதாரங்களைப் பார்ப்போம்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

கூடும் அன்பினில் இம் மெய்யடியார்கள் கும்பிடுவது உலகின் நலத்திற்காகவும் மக்களின் சுகத்திற்காகவுமே. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமக்கென எதுவும் வேண்டாமல் வையகமெங்கும் துயர் நீங்கி இன்பம் பெருக வேண்டுமென்றே வேண்டினார்.

இறைவனிடம் இவர் ஒருதடவை நிதி வேண்டியபோது "நீள்நிதி வேண்டினார்க் கீவது ஒன்றும் மற்றிலேன் உன்னடி அல்ல தொன்றறியேன்" என்று கூறுகிறார். அதாவது தமக்கு நிதி வேண்டும் என்று இவர் இறைவனிடம் வேண்டவில்லை. தம்மிடம் கேட்பவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லையே என்று குறைப்பட்டார். சம்பந்தரின் தேவாரப்பாடல்கள் பலவும் அடியார் குழாத்திற்கு அருள் செய்ய வேண்டிப் பாடியவை. செங்குன்றூரில் குளிர்சுரம் நீங்குதல், விழிமிழலையிற் பஞ்சம் தீர்க்கக் காசு பெறுதல் போன்றனவெல்லாம் மக்கள் மீது இவர் வைத்த அன்பால் விளைந்தன ஆகும்.

அத்துடன் திருமருகல் திருத் தலத்திற்குச் சுவாமி தரிசனம் செய்யச் சென்ற சம்பந்தர் பெண்ணுரிமைக் கடமைக் கற்பொழுக்கால் வலியக் கூடிவந்த காதலனை இழந்து அல்லற்பட்ட செட்டிப்பெண்ணின் துன்பத்தைக் கண்டு இரங்கி அப்பெண்ணின் கணவனை எழுப்பிக் கொடுத்து அவள் முகத்தில் மகிழ்ச்சியைக் கண்ட பின்புதான் திருமருகல் திருக்கோயிலை நண்ணினார். இச் செயல் மக்கள் மேல் வைத்த அன்பாற்புரிந்த செயற்கரிய செயலாகும்.

சுந்தரர் அவிநாசிக்குச் செல்கின்றார். ஒரு வீட்டில் மங்கல ஒலியும் எதிர் வீட்டில் அமங்கலமான அழுகுரலும் கேட்கிறது. சுந்தரர் அவிநாசியப்பனைக் காணச்செல்ல வில்லை வாழ்வோருக்கே வாழ்த்துக்கூறும் இயல்பிற்சிக்கி மங்கல முழக்கொலியுள்ள வீட்டிற்கும் போகவில்லை. அழுகுரல் கேட்ட வீட்டிற்கே செல்கிறார். ஒத்த வயதுப் பாலகர்கள் ஒருவரை முதலை விழுங்கிவிட மற்றவனுக்குப் பூணூற் சடங்கு என அறிந்தார். பாலனை இழந்து பரிதவிக்கும் பெற்றோரின் அவலநிலையை உணர்கிறார். அன்புப் பிரவாகம் பீறிட்டுப் பாய்கிறது. முதலையுண்ட பாலகனைத்தருமாறு முத்தமிழ் விரகர், பாடிப்பரவிப் பிறவா யாக்கைப் பெரியோன் கருணையாற் பிள்ளையை மீட்டுப் பெற்றோரிடம் கொடுத்துவிட்டே அவிநாசியப்பனைத் தரிசிக்கச் சென்றார்.

மெய்யடியார்கள் தமது எதிரிகள்மேலும் அன்புப்பிணைப்பை இறுக்கியுள்ளமை பெரிய புராணத்தினூடு புலனாகிறது. மெய்ப்பொருள் நாயனார், வஞ்சகன் தம்மை வாளாற் குத்திக் கொன்றதைப் பொறுத்துக் கொண்டார். வஞ்சகனைக் கொல்வதற்கு முயன்ற மெய்க்காப்பாளனாகிய தத்தனிடம் அவர் "தத்தா இவர் நமர்" எனத் தடுத்தார். கொலை செய்தவர் சிவனடியார் வேடத்திலிருந்ததால், அவரை நம்மவர் என்றும், அவரை

யாரும் துன்புறுத்தாது காப்பாற்றி ஊர்ப்புறத்தே விட்டு வருமாறும் பணித்தார். இரத்த வெள்ளத்திற் கிடந்த நாயனாரிடம் கொலை செய்த வரை இடையூறின்றி அனுப்பிய தாக தத்தன் கூறியதும் "இன்றைக்கு ஐயன் செய்தது வேறு யாரால் செய்ய இயலும்" எனக் கூறி உயிர்நீத்தார்.

அடியார் மேற்கொண்ட இவ் அன்பானது பிறர் துன்பம் கண்டு சீறும் அளவிற்கு பிரவாகித்துச் செல்லும். அன்பர்க்கு அடாதன அடுத்த போது அந்த அடாத செயலைத் தடுப்பதற்காக எறிபத்தர் கையில் எடுத்த ஆயுதமே "பரசு" எனும் கோடரி போன்ற கருவியாகும். புகழ்ச் சோழ அரசனுடைய பட்டத்து யானை மதம் கொண்ட காரணத்தால் வயது முதிர்ந்தவராகிய சிவகாமி யாண்டாரின் பூக்கூடையை பறித்துச் சிதைத்தது. இதனைக்கண்ட எறிபத்தர் தனது ஆயுதத்தினாற் பட்டத்து யானையைக் கொலை செய்தார். நல்லவர்களைக்காக்க எடுக்கும் கருவி பழிப்புக்குரியதன்று என்பதையும் அடியார்மேல் எறிபத்தர் கொண்ட அன்பையுமே இச்செயற்பாடு விளக்குகிறது. இதனைச் சேக்கிழார்

"மழைவளர் உலகிலெங்கும் மன்னிய சைவம் ஓங்க
அளவிலா சடையான் அன்பர்க்கடாதன அடுத்தபோது
முளையரி என்னத் தோன்றி முரன்கெட எறிந்து தீர்க்கும்
பழமுறை பரசும் தூய பரசுமுன் எடுக்கப் பெற்றார்"

என்கிறார்.

அடியார்களின் அன்பானது விலங்குகளின் மீதும் பிரவாகித்தது. சிவயோகி ஒருவர் கயிலைமலையில் நந்திதேவர் அருள் பெற்றுத் தென்னாட்டிற்கு வந்தார். அங்கே சாத்தனூர் எனும் ஊரில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த மூலன் இறந்துகிடப்பதைக் கண்டார். அருகிலே அவன் மேய்த்த பசுக்கள் அவன் உடலைச்சுற்றி சூழ்ந்து கண்ணீர்விட்டுக் கதறிக் கொண்டிருந் தன. பசுக்களின் துயர் தீர்க்க விரும்பிய சிவயோகி தன் உடலை ஒரு புறத்து மறைத்து வைத்து விட்டுத் தன் உயிரை மூலனின் உடலிலே புகுத்தி மூலன் உயிர் பெற்றதைப் போல் எழுந்தார். ஆநிரைகள் துன்பம் நீங்கி மகிழ்ச்சியுற்றன. இச்செயலைப் புரிந்த சிவயோகியார் திருமூலரே ஆவார். இதனின்றும் விலங்கு களிடமும் எம் அடியார்கள் அளவற்ற அன்பு வைத்திருப்பது புலனாகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அடியார்கள் இறைவன்மீது கொண்ட அன்பானது அளப்பரியது. அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. சாக்கிய நாயனார் பௌத்த மதத்தில் இருந்து கொண்டு சிவனை வழிபட்டார். எந்த வேடம் கொண்டாலும் எந்நிலையில்

நின்றாலும் சங்கரன் தாள் மறவாமை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு சிவன்மீது கல்எறிந்து வழிபட்டார். வெளிப்பார்வைக்குச் சிவனை கல்லால் அடிப்பது போல் தோன்றி னாலும் சாக்கிய நாயனார் கல்லை மலராக எண்ணி இறைவனை அர்ச்சித்தார். அவ்வழிபாட்டை இறைவனும் ஏற்றுக் கொண்டார். இதைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"என்னிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருளென்றே
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்"

இறைவன்மேல் உயிரையே வைத்திருந்த காரைக்கால் அம்மை யார் பேயுருவம் வேண்டிப் பெற்று இறைவன் இருக்குமிடத்திற் காலாற் நடந்து செல்லல் ஆகாதென எண்ணித் தலையினாலே நடந்து சென்றார். இதைக் கண்ணுற்ற உமை யம்மையார் அதிசயித்து "இங்குவரும் எலும்பு பொதிந்த யாக்கையின் அன்புதான் என்னே" என வியந்தார்.

"அம்பிகை திருவுள்ளத்தி னதிசயித் தருளிக் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினா னடந்திங் கேறும்
எம்பெரு மானே ரெற்பின் யாக்கையன் பென்னே என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயகனருளிச் செய்வான்"

இறைவன் "நம்மைப் பேணும் அம்மை இவள்" என உமைக்குக்கூறி "அம்மையே" எனக் காரைக் காலம்மையாரை அன்புடன் அழைத்தார். இந்த அன்பு மொழியின் பெருமையை வார்த்தைகளினால் வர்ணிக்கமுடியாது.

ஆகம விதிக்குப் புறம்பான பூசை புரிந்த கண்ணப்பரின் அன்பின் ஆழத்தை அளவிடமுடியாது. தனது கண்கள் இரண்டையும், இறைவனுக்குக் கொடுக்கும் மனத்துணிவும் இறைவன் மேற்கொண்ட அன்பும் சொல்லற் கரியன. உமிழ்நீர் திரு மஞ்சன நீராக, குடுமியிற் சொருகியபூ அர்ச்சனைப்பூவாக, சுவைத்துப்பார்த்த இறைச்சி நிவேதனமாக, காலிற் செருப்புமாகச் சென்று கண்ணப்பர் செய்த ஆகம விதிக்குப் புறம்பான பூசை உண்மையான பேரன்புடன் செய்யப்பட்டதால் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இவ்வாறாகப், பெரியபுராண அடியார்களின் அன்புப் பிரவாகம் அளவிடமுடியாதது. இவர்களைப் போலவே நாமும் அன்பு நெறியைப் போற்றிப் பயன் பெறுவோமாக.

உ

# திருமாங்கல்யத்தின் புனிதம்

செல்வி பாமதி. நல்லலிங்கம் அவர்கள்

மனித வாழ்க்கை, பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு படிமுறைகளினூடாக நிறைவெய்துகின்றது. இல்லறத்தின் சிறப்பைப்பற்றித் திருவள்ளுவர் தமது திருக்குறளில் கூறியுள்ளார். வாழ்க்கைத் துணைநலம் என்ற அத்தியாயத்தில்

"இல்வாழ் வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

எனக் குறிப்பிடுகிறார். கவியோகி சுத்தானந்த பாரதியார் மேற்கூறப்பட்ட திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

"The ideal house holder is he
Who helps the natural orders three"

இயல்புடைய மூவர் என்று வள்ளுவர் இங்கு குறிப்பிட்டது, பிரமச்சாரிகள், வானப்பிரஸ்தம் மேற்கொள்ளுவோர், சந்நியாசிகள் என்போர்.

"தெய்வம் தொழாள் கொழுநற் தொழுதெழவாள்
பெய் யெனப் பெய்யும் மழை"

என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இத்திருக்குறளின் கருத்து, மனைவியானவள் தெய்வத்தை வணங்காவிடினும் கணவனுடைய கடமைகளுக்கு உதவியாயிருந்து, அக்கணவனையே கடவுளாக நினைத்து வணங்கும் பெண் மழை பெய்யென்று கூறினால் மழை பெய்யும். பகவான் சத்தியசாயிபாபாவும் "என்னை அறிவதற்கு கானகமா தேவை? இல்லறமே போதுமானது" என்று குறிப்பிடுகின்றார்.

மனம் போல மாங்கல்யம், என்று கூறுவார்கள். தாலி பெண்ணுக்கு வேலி. "பரமசிவன் கழுத்தினிலே பாம்பும் ஒரு கயிறு, பாம்பைவிட பயங்கரமாம், பத்தினியின் கயிறு" என்று திரைப்படப்பாடல் ஒலிக்கின்றது. மாங்கல்யம் ஒன்பது இழைகள் உடையது. இந்த ஒன்பது இழைகளையும் காயத்ரி மந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

✡ தீயவர் தங்கள் தவறுகளுக்கு சமாதானம் தேடுவர். ✡

1) வாழ்க்கையை உள்ளது உள்ளபடி புரிந்து கொள்ளுதல்
2) மேன்மை
3) ஆற்றல்
4) தூய்மை
5) தெய்வீக நோக்கம்
6) உத்தம குணங்கள்
7) விவேகம்
8) தன்னடக்கம்
9) தொண்டு

ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன. இவற்றை ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டதாகும். திருமணச்சடங்கில் இம்மாங்கல்யம் மணமகனால் மணமகளுக்கு அணிவிக்கப்படுகின்றது.

**2005ம் வருட விரத தினங்கள்**

| மாதம் | அமா | சஷ்டி | ஏகாதசி | பிரதோ | பௌ | சிவ | கிரு | சங் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 10 | 15 | 6,21 | 8,22 | 25 | 8 | 19 | 29 |
| பெப்ரவரி | 8 | 14 | 5,19 | 6,21 | 23 | 7 | 16 | 27 |
| மார்ச் | 10 | 16 | 6,21 | 8,23 | 25 | 8 | 15 | 29 |
| ஏப்ரல் | 8 | 14 | 5,20 | 6,21 | 24 | 7 | 11 | 27 |
| மே | 8 | 14 | 4,20 | 5,21 | 23 | 6 | 9 | 26 |
| ஜூன் | 6 | 13 | 2,18 | 4,19 | 21 | 5 | 5 | 25 |
| ஜூலை | 6 | 12 | 2,17,31 | 3,19 | 21 | 4 | 2,30 | 24 |
| ஆகஸ்டு | 4 | 11 | 16,30 | 2,17 | 19 | 3 | 26 | 22 |
| செப்டம்பர் | 3 | 9 | 14,29 | 1,15,30 | 17 | 1 | 22 | 21 |
| அக்டோபர் | 3 | 9 | 13,28 | 15,30 | 17 | 1,31 | 20 | 20 |
| நவம்பர் | 1 | 7 | 12,27 | 13,29 | 15 | 29 | 16 | 19 |
| டிசம்பர் | 1,30 | 6 | 11,27 | 13,28 | 15 | 29 | 13 | 19 |

### உள்ளத் தூய்மை

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும். குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருப்புக் கொள்வாயன்றோ? அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆனபடியால், சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனந் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழ இறைவன் எழுந்தருளுவான்.

✡ நல்லவர்கள் தங்கள் தவறுகளைத் தவிர்ப்பது எப்படி என்று சிந்திப்பார்கள். ✡

சந்நிதியான்

(தொடர்ச்சி...

உ

# யார் இந்த (ச்) செல்லம்மா?

*சச்சிதானந்தா ஆச்சிரமம்*

## ஸ்ரீசச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

## குருநாதரின் வழிநடத்தலில்

அம்மையாரும் சுவாமிகளின் கட்டளைக்கு இணங்கி சுவாமிகளை வணங்கி விடைபெற்றார். அவர் பிச்சை யெடுக்கவென்று புறப்பட்டாரேயொழிய அவரது மனமோ பலபல எண்ணங் களால் சுழன்று கொண்டிருந்தது. இவரது உள்ளத்தில் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

அம்மையார் பிச்சை யெடுப்பதன் பொருட்டு உடுத்தியிருந்த சேலையுடன் புறப்பட்டார். அது மிகவும் அழுக்காகவும் கிழிசலாகவும் இருந்தது. தனது தோற்றம் அம்மையாரிற்கு மிகவும் வேதனை யளித்தது. மனது மிகவும் வருந்தியபடியே குருநாதனையும் இறைவனையும் நினைந்து அழுதபடி நீர்வேலித் தரவையூடாக நீர்வேலியை நோக்கி நடக்கலானார். அவர் நீர்வேலிக்கரையை அடைந்ததும் ஓர் ஆலமரத்தின் கீழ் ஆலம்வேர் ஒன்றில் தலையை வைத்து படுத்துக் கொண்டார். அவர் மனது பலவழிகளிலும் சிந்தனை செய்த வண்ணம் இருந்தது. பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் பெரும் செல்வங்களுடன் ஊரார் மதிக்க இருந்தேன். இப்போ கந்தலும் கிழிசலுமான உடையுடன் எப்படி வீடுகளில் சென்று பிச்சை கேட்பது. காண்போரின் ஏளனப் பார்வையும் ஏளனப்பேச்சுக்களையும் எப்படி முகம் கொள்வது என எண்ணி மன உளைச்சலும் தடுமாற்றமும் அடைந்தார். இது குறித்து அவரது மனம் மிகவும் வெட்கமும் வேதனையும் அடைந்தது. அம்மையாரின் மனம் மிகவும் துயர்வு கொண்டதாக காணப்பட்டது. நாம் மிக அதிகமாக ஆன்மீக கருத்துக்களை தெரிந்து வைத்திருக்கலாம். ஆனால், அவற்றை நடைமுறையில் பயிற்சி செய்யும்போதுதான் அது எவ்வளவு கடினமானது என்பது தெரியவரும். மானபிமானத்தை விட்டுவிடவேண்டும் என்றால் அது சுலபமானதாகத் தோன்றும். ஆனால் ஒரு வீட்டில் பிச்சை ஏற்று அதனை பரிசோதனை செய்ய முற்பட்டாலோ, மனது கிடந்து துடிக்கிறது, அடம்பிடிக்கிறது. அம்மையாரின் நிலையும் இத்தகையதாகவே இருந்தது. எனினும் குருநாதரின் அறிவுரைகளை எல்லாம் சிந்தித்த அம்மையார் தம்மை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அவ்விடத்தினின்றும் எழுந்து

✡ பக்தியில்லாத தனிச்சிறப்புப் பெற்றவர்கள் மூலப்பொருளை அறியமாட்டார்கள். ✡

தோட்ட வெளியொன்றினூடே நடக்கத் தொடங்கினார்.

மேற்படி தோட்டவெளியில் சிலர் வேலை செய்துகொண்டு இருந்தனர், அப்போது ஒரு பெண்மணியும் அங்கு வேலை செய்து கொண்டிருந்தார். அம்மையார் அவரிடம் சென்று வெத்திலை தரும்படி கேட்டார். அப்பெண்மணியும் அம்மையாரைப் பார்த்து நீ எங்கே போகிறாய்? உடுப்புகளும் அழுக்காயும் கிழிசலாயும் இருக்கிறது என்றாள். அம்மையாரும் எனக்கு சுவாமி கும்பிட்டு நல்ல கதியடைய விருப்பம் அதனால் வீட்டை விட்டு வெளிக்கிட்டு விட்டன் செல்வச்சந்நிதிக்கு போய்க்கொண்டு இருக்கிறன் என்றார். அப்பெண்மணியும் நீ பொம்புளை சாமி கும்பிட தனிய வெளிக்கிட்டாய் என்னவெல்லாம் நடக்கும் தெரியுமோ என்று கூறி அம்மையாரை ஏளனம் செய்தார். அம்மையாரும் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். சிறிது தூரம் அம்மையார் சென்றபோது அப்பெண்மணிக்கு வேறு ஒரு சிறுபெண் தண்ணீர் கொண்டு வந்திருந்தாள். அப்பெண்மணி அம்மையாரை நோக்கி ஏ, இங்கை வந்து கொஞ்சம் பழந்தண்ணி குடிச்சிட்டுப் போவன் என்று அழைத்தாள். அம்மையாரோ வியப்புடன் திரும்பிப் பார்க்காது போய்விட்டார். சிவனடியார்களைப் புரிந்து கொள்ளாதவர்களிடமும், மதிக்காதவர்களிடமும் பழம் தண்ணிதந்தாலும் குடிக்கக் கூடாது என்று அவர் எண்ணினார்.

இதன் பின்னர் ஒரு தென்னந் தோப்பினூடு நடந்துசென்று ஓர் தென்னை மரத்தினடியில் குந்திக் கொண்டிருந்தார். நடந்து வந்த களை அவரை வாட்டியது. சற்றுத்தூரத்தில் ஓர் கொட்டிலில் மூன்று நான்குபேர் சுருட்டுச் சுற்றிக் கொண்டிருந்தனர். இப்போது ஒரு பெண் சந்தைக்குப் போய்விட்டு வந்து கொட்டிலடியில் கடகத்தைப் போட்டவர் அம்மையாரைக் கண்டார். அப்பெண்ணிடம் சிறிது நீர் தருமாறு கேட்க, அப்பெண்ணும் தண்ணீர் கொடுத்தார். அம்மையாரும் தாகம்தீர தண்ணீர் அருந்தினார். சுருட்டுச் சுற்றிக் கொண்டிருந்தவர்கள் "உது ஆர் பொம்பிள்ளை? என விசாரிக்க, அப்பெண்மணியும் அது ஏன் உங்களுக்கு நீங்கள் உங்கடை வேலையைப் பாருங்கோ. அது ஏதோ தன்பாட்டிலை போகுது" என்று கூறினாள். அடியவர்கள் பால் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் தான் அப்பெண்மணியை அவ்வாறு பேச வைத்தது.

இதன் பின்னர் அம்மையார் அங்கிருந்து புறப்பட்டவர் பருத்தித்துறை - செல்லும் பிரதான வீதிக்கு வந்து சேர்ந்தார். வழியில் ஓர் ஐந்து வயது மதிக்கத்தக்க உருண்ட கறுத்த சிறுவன் நின்றான். அம்மா, நீ எங்கே போகிறாய்? என்று

☆ நேர்மை என்பது ஆன்மீக வாழ்க்கையின் முதுகெலும்பு. ☆

கேட்டான். அம்மையாரும் தான் செல்வச் சந்நிதிக்குப் போவதாகக் கூறினார். சிறுவன் அம்மையார் உடுத்திருந்த அழுக்கானதும் கிழிசலானதுமான சேலையைப் பார்த்தான். அட செல்வச்சந்நிதிக்கு உந்தக் கிழிசலோடையே போகப் போகிறாய்?, "உன்னை பஸ்ஸிலை ஏத்த மாட்டாங்கள் என்று குறும்புச் சிரிப்புடன் கூறினான். அம்மையாரின் கலவரமடையும் முகத்தைப் பார்த்து சிறுவன் உண்மையாகத்தான் உன்னை பஸ்ஸில் ஏத்தாங்கள், உந்தக்கிழிசல் உடுப்போடை சத்தியமாய் பஸ்ஸில் ஏத்தாங்கள்" என்றான் கேலியாக. சிறுவனின் ஏளனம் அம்மையாரைக் கஷ்டத்திற் குள்ளாக்கியது. தனது கிழிந்த அழுக்கடைந்த சேலையை சிறுவன் ஏளனம் செய்வது கண்டு அம்மையாரிற்கு மிகவும் வெட்கமாகிவிட்டது. கிழிந்த உடைப்பகுதிகளைக் கைகளால் பொத்திக்கொள்கிறார். சிறுவன் சிரிக்கிறான்.

இதன் பின் சரிசரி நீ சாப்பிட்டியே? எனச் சிறுவன் கேட்டான். இல்லை என்றார் அம்மையார். சிறுவனும் அருகிலுள்ள வீட்டைச் சுட்டிக்காட்டி, "அங்கை அருளம்பலம் வீட்டை போ, ஏதும் தருவினம்" என்று கூறி அம்மையாரை அங்கு அனுப்பி வைக்கிறான். அம்மையாரும், அவ்வீட்டிற்குச் சென்றார். அப்போது தான் தலைமுழுகிவிட்டு ஈரம் உணர்த்தியபடி ஒரு பெண் வருகிறார். அம்மையார் பிச்சை எனக்கேட்க, அப்பெண்மணி, "நாயை அவிட்டு விட்டடோ" என்றார். அம்மையார் அங்கிருந்து மீளவும் சிறுவனடிக்கு வந்தார். "என்ன சாப்பிட்டியே" என்றான் சிறுவன் சிரித்தபடி. இல்லை என்று அம்மையார் சொல்லவும், அப்ப வா, வாத்தியார் வீட்டை ஏதும் வாங்கித் தருகிறேன் என்றான். அம்மையார் வேண்டாம் என மறுத்துவிட்டார். மீண்டும் சிறுவன் அம்மையாரைப் பார்த்து "அப்ப சரி, ஆனால் உன்னை பஸ்ஸில் ஏத்தாங்கள்" என்று கூறிவிட்டுச் சிரித்து, அம்மையாரிடம் "சரி சரி, எவ்வளவு காசு வைத்திருக்கிறாய்? எனக் கேட்டான். 25சதம் எனக் கூறினார் அம்மையார்.அப்பணத்தை அம்மையாரிடம் வாங்கிய சிறுவன் அவ்வழியே வந்த பஸ் ஒன்றை மறித்து அம்மையாரை அச்சுவேலிச் சந்தையடியில் இறக்கிவிடுமாறு கூறி காசையும் நடத்துனரிடம் கொடுத்து விடுகிறான்.

மேற்படி சிறுவனின் செயலை அம்மையாரால் மறக்கமுடியவில்லை. சிறுவன் தன்னை ஏளனம் செய்தாலும், தனக்கு உதவிசெய்ய முற்பட்டதை எண்ணிப்பார்த்தார். அவனது தோற்றத்தையும் குறும்பையும் பார்க்க இவன் "பாலமுருகன்" தானோ என எண்ணத்தோன்றியது. இப்படியே சிந்தித்தபடி அச்சுவேலிச் சந்தையை அடைந்தார் அம்மையார். பஸ்சை விட்டு இறங்கி கால் போன போக்கில் நடக்கலானார். (தொடரும்..

✡ எந்தப்பொருளின்மீது ஆசையில்லையோ, அதனால் துன்பம் இல்லை. ✡

உ

# திருப்பாவையும், திருவெம்பாவையும்

திருமதி சிவனேஸ்வரி - பாலகிருஷ்ணன் அவர்கள்.

"மாதங்களில் நான் மார்கழி" என்ற கீதாசாரியனுக்குரிய மாதம் மார்கழி. மகாபாரத யுத்தமும் மார்கழியில்தான் நடந்தது. அப்போது தான் கீதையும் பிறந்தது. உமாபதி, பதஞ்சலி, வியாக்ரபாதருக்கும் ஆனந்தத் திருநடனக்காட்சியை அளித்ததும் மார்கழியில்தான். ''மார்கழி மாதம் திருவாதிரை நாள்வரப் போகுதும் ஐயே, மனதைப் புண்ணாக்காமல் சிதம்பரம் போக உத்தரம் தாரும் ஐயே" என நந்தனார் தில்லையிலே மார்கழி திருவாதிரைகாண உருகுகிறார். திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவை, திருப்பாவை பாடப்படுவதும் மார்கழியில்தான். ஆலயங்களில் எல்லாம் அதிகாலையில் மணியோசை ஒலித்து தெய்வீகமாகத் திகழும் மாதம் மார்கழி.

அழகின் கொழுந்தாகிய தெய்வப்பெண் ஆண்டாள் உண்ணும் சோறும், பருகும் நீரும் எல்லாம் கண்ணனே என்று களிகூர்கிறாள். ஓங்கிஉலகளந்த உத்தமனைப்பாடிப் பாடி பரவசம் அடைகிறாள். கார்முகில் வண்ணன், கமலக் கண்ணனைத் தன் திருஉள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்க்கிறாள். கண்ணனையே கணவனாகக் கொள்கிறாள். தேனார் பூஞ்சோலைத் தென் அரங்கமாநகரில் கண்ணுறங்கும் பெருமானை நினைக்க நெஞ்சுண்டு, வாழ்த்த வாயுண்டு, பாடப்பாட்டுண்டு என்று கண்ணனின் மணக்கோலத்தை கனவிலும் நனவிலும் காண்கிறாள். கற்புநிலை அன்பு நிலையின் சிகரம். ஆண்டாளுக்கு கண்ணனின் எதிரில் யாவும் சூனியமாயிற்று. அது வேதானந்த நிலை. ஆண்டாள் பரிபக்குவமெய்திய ஆன்மா. ஆன்மா வாகிய நாயகி சர்வ ஆன்ம நாயகனாம் இறைவனை தன் நாயகனாகக் காண்கிறது. தன்னை மறந்து தன் நாமங்கெட்டுத் தலைவன் தாளில் தலைப்படுகின்றது. திருத்துழாய்ச் செடியின்கீழ் தெய்வ மலராகத் தோன்றிய கோதைக்கு பெரியாழ்வார் கண்ணனுடைய பாடல்களையும், கதைகளையும், லீலைகளையும் சொல்லித்தந்தார். கோதையின் கனவிலோ வசீகரமாக குழலிசைத்து வேணுகோபாலனாக, காதலனாக கண்ணன் தோன்றுகிறான். அவனுக்கென்று தொடுத்த பூமாலையைத் தான் அணிந்து பார்ப்பாள். மனதினாலே ஸ்ரீவில்லி புத்தூரை ஆயர்பாடியாக்கினாள். தன்னையும் தன் தோழிகளையும் இடையர்குலப் . பெண்களாகப்

காலத்தை வீணாக்குவதே செலவுகள் அனைத்திலும் அதிகச் செலவு.

பாவித்தாள். மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில் தோழியரோடு நீராடப் புறப்படுகிறாள். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் ஆண்டாள். பாவை நோன்புக்கென கோதைநாச்சியார் திருவாயிலிருந்து முப்பது பாசுரங்கள் புறப்படுகின்றன. அத்தனையும் உபநிடதத்தின் சாரமாய், முத்துக்குவியலாய்; பொன்சுரமாய் பொழிகின்றன. "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" எனத்தொடங்கி பாவைநோன்பு நோற்கவரும்படி, குளிர் நீராடவரும்படி அழைக்கிறாள். நந்தகோபன் குமரன், யசோதையின் சிங்கக்குட்டி கருமேனி அழகன், செந்தாமரைக் கண்ணன், பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமன் திருப்பாதங்களை நினைந்து பாடல்கள் இசைத்து, விடியுமுன்னரே விரைந்து நீராடி யாசிப்பவருக்கு இல்லை எனாது இருப்பதைக் கொடுத்து, ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி பாவைநோன்பு நோற்றால் மாதம் மும்மாரி மாறாது பெய்யும், பசுக்களோ வள்ளல்களைப் போல் குடம் குடமாகப் பாலைப் பொழியும். நெற்பயிர்கள் எல்லாம் வளர்ந்து செல்வம் செழிந்தோங்கும். மதுராபுரிமண்ணில் உதித்த மாலனை, மாயநாதனை, யமுனை நதித் துறையில் இருப்பவனை, ஆயர் குலத்தில் தோன்றிய அணிவிளக்கை தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை தூய்மையான மலர்களைத்தூவி அவன்புகழை வாயாரப்பாடி, நெஞ்சில் அவனை நினைந்து துதித்தால், நாம் முன்பு செய்த பாவங்களும், இனி நமையறியாது செய்யும் பாவங்களும் தீயிலிட்ட பஞ்சுபோல தீய்ந்து போகும். கருநீல மணிவண்ணன், முப்பத்துமுக்கோடி தேவர்துயர் களையும், கண்ணன் அண்டியவர் களைக் காப்பவன், அன்று இவ்வுலகம் அளந்தான் அடிபோற்றி, இராவணனை வென்ற வீரம் போற்றி, சகடாசுரனை சாய்த்தது, கன்று வடிவான அசுரனை எட்டி எறிந்த கால்கள் போற்றி, குன்றைக் குடையாக உயர்த்திய கருணை போற்றி, பகையை அழித்திடும் உன்கைவேல் போற்றி போற்றி தேவகியின் மகனாகப்பிறந்து யசோதையின் மகனாக வளர்ந்தவனே, கம்சன் வயிற்றில் நெருப்பாக நின்ற பெருமானே உன்தீரம் போற்றுகிறோம். கண்ணா, கருநீலவண்ணா, ஆல் இலையில் அவதரித்தவனே, மார்கழியில் நீராடவந்த எங்களுக்கு அருள்புரிவாய். ஆயர்கள் நாங்கள் செய்த புண்ணியத்தால் புனிதன் உன்னைப் பேறாக அடைந்திருக் கிறோம். குறையில்லாத கோவிந்தா உன்னுடன் உண்டான உறவு இனி ஒருபோதும் மாறாது. இளங்காலைப் பொழுதில் உன்னை வந்து வணங்கி, பொற்பாதங்களைப் போற்றிப் பாடுகிறோம். எங்கள் சிறு சேவைகளையெல்லாம் ஏற்காமல், தள்ளிவிடக் கூடாது. எத்தனை பிறப்பெடுத்தாலும் உன்னோடு உறவு

✡ போதும் என்ற மனம் படைத்தோர் மரணத்தைக்கண்டு அஞ்சுவதில்லை. ✡

கொள்வோம், உனக்கே அடிமைகளாவோம். அருளாளா எங்களை ஆட்கொள்வாய். "வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை" வணங்கி மாலை சூடிய மதுசூதனன் கைப்பற்ற கண்ட கனவுப்படி அரங்கனோடு சேர்ந்த தெய்வீகப்பாவை, "என்னைப்போல இறைவனுடன் ஐக்கியமாகுங்கள்" என்று நமக்கு அருளிய திருப்பாவை முப்பது பாசுரங்களையும் தவறாமல் நாளும் ஓதுபவர்கள் செல்வக்கோமான் கோவிந்தன் அருள்பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெறுவர்.

கல்லையும் கனியவைக்கும் பேராற்றல் மிக்க திருவாசகத்தினை அருளிய மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு போராட்டங்கள் நிரம்பியது. அமைச்சராகப் பணியாற்றி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, உலக ஆசைகளைத் துறந்து அழியாத மகத்தான திருமுறை தந்தவர். ''திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்". மாணிக்கவாசகர் "நானார் என்னுள்ளமார் ஞானங்களார்" என்ற மெய்விளக்கதத்துவ ஆராய்ச்சியில் இறங்கி தன் மந்திரி பதவியைத் துச்சமெனத்துறந்தார். மாதொரு பாகனை நேரில்கண்டு பேரின்பம் துய்த்தவர். திருப்பெருந்துறையில் கண்ணார் கழல்காட்டி என்னை ஆட்கொண்ட அண்ணாமலையான் என்றும், காட்டாதனவெல்லாம் காட்டி சிவங்காட்டி தாள்தாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி என்னை ஆட்கொண்ட இறைவா என்றும் நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி என்றும் உரைக்கும் கருத்துக்கள் உள்ளொளி பெற்றவையாகும்.

தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு அருளியதே திருவெம்பாவை. எத்திக்கும் போற்றும் தித்திக்கும் திருவெம்பாவை மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து சிவசிந்தையுடன் குளிர்ந்த தூய நீரில் சீதப்புனலாடி, சிவசின்னங்கள் அணிந்து, அடியார்களுடன் நகரஸங்கீர்த்தனம் திருவீதிகளில் பாடி எம்பிரான் ஆலயத்தில் ஓதல் வேண்டும். நாமெல்லாம் சிவனருளால் முத்தி பெறுவது உறுதி. எம்மோடு உடனாய் இருந்து, எமது குறையகற்றி (கோதாட்டி) உயர்த்துகிறான். ''நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்" சிவனின் சீலத்தை எப்படிப் போற்றுவது. திருவெம்பாவையில் கன்னியர்கள் என்துணைவன், என்னரசன், இன்னமுதன் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். அண்ணாமலையில் வீற்றிருக்கும் அவனை விண்ணகத்தேவர்களும் தம் முடிசாய்த்து அவன் திருவடியில் வணங்குகிறார்கள். ''தானே வந்தெம்மைத் தலையழித்து ஆட்கொண்டருளும்" தலைவன் அவன். ''போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்!

✡ உன் நண்பனை ரகசியமாகத் திருத்து: வெளிப்படையாகப் புகழ். ✡

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் அருள் சக்தியுடன் மண்ணுலகுக்கு எழுந்தருளுகின்றான். மும்மலத்தின் முடிச்சறுக்கும் திருவெம்பாவை இன்பத்தமிழ்ஊற்று. மும்மலப் பிணிப்பிலிருந்து மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் கன்னிகளாகிய ஆன்மாக்களைத் துயிலெழுப்பி, அம்மை அப்பனாய் சிவசக்தியாய் விளங்கும் இறையருள் என்ற இன்பப் பொய்கையில்மூழ்கி, ஆதியுமந்தமுமற்ற அரும்பெரும் ஒளியில், அருட்சோதியில் எம்மை இரண்டறக்கலக்கச் செய்கின்ற அருந்தமிழ்ஊற்றே திருவெம்பாவை. இந்த விரதநாளில் கடைசிநாளான திருவாதிரைநாளில் நடராஜரின் திருநடனம் கண்டுகளித்து கூத்தப்பிரான் திருவடிகளை அடைய வேண்டும். தெய்வத் தன்மை வாய்ந்த திருவெம்பாவையை இதயசுத்தியோடு பாடி விரதமிருந்து, அஞ்ஞானத்தைப் போக்கி அருள் பெறுவோமாக. நாடிவரும் பக்தர்களுக்கு கோடிவரம் அருளும் ஆஞ்சநேயர் ஜெயந்தியும், ஹரிகரசுதன் ஐயப்பன் அவதாரமும் நிகழ்ந்த தெய்வீக மார்கழியில் திருப்பாவையும், திருவெம்பாவையும் முழங்கவேண்டும். மாதொரு பாகனைப்பாடி, மாலே மணி வண்ணா என்று குரலெழுப்பி மார்கழி நீராடி இறைவனையடைவோம்.

## நிழல்

தருமலிங்கம், தன் பேருக்கு ஏற்ப அள்ளி வழங்கும் வள்ளண்மையுடையவர். அவருடைய மனைவி இதற்கு நேர்மாறானவள். கிள்ளியுந் தராத உலோபி. "இது வீடா? தரும சத்திரமா? இப்படி நீ அள்ளிக்கொடுத்தால் நம்ம கதி என்ன ஆகும்? நமக்கு என்று நாலு காசு வேண்டாமா?" என்று முழங்கினாள். சில காலம் சென்றது. வைகாசி மாதம் முதல் வாரம். அக்கினி நட்சத்திரம். கொடிய வெய்யில் கொளுத்துகின்றது. கணவர் வீட்டுக்கு வந்தார். "பெண்ணே, உன் தாயார் வீட்டில் இருந்து தந்தி வந்திருக்கிறது, அவசரம் புறப்படு" என்றார். "யாருக்கு என்ன இடரோ? என்று மதியுங் கதியுங் கலங்கி அவள் கணவர் வண்டி வராத வழியாக, நிழல் இல்லாத வழியாக மனைவியை அழைத்துக்கொண்டு நடந்தார். சற்று உடல்பருத்த அவள் துடித்துவிட்டாள். "என்னங்க... எங்காவது நிழலைக்காட்டுங்கள், உயிர் போகின்றது" என்றாள். கணவரோ "என் மாணிக்கமே! உனக்குப் பின்னே என் நிழல் காய்கின்றதே.. அதில் ஒதுங்கிக்கொள்" என்றார். மனைவி "உமக்கு அறிவு இருக்கின்றதா? என் நிழல் எனக்கு உதவுமா?" என்று எரிந்து விழுந்தாள். "பெண்ணே பாலும் தேனும் பாதாம் பருப்பும் இட்டு வளர்த்த இந்த உன் உடம்பின் நிழல் உனக்கு உதவவில்லையானால், பெட்டியில் வைத்த உன் காசு மட்டும் உனக்கு உதவுமா?" என்றார். அவள் அறியாமை அழிந்தது.

*கருமி சேர்த்து வைக்கும் செல்வம், செழிப்பைத் தராது.*

✡ செயல்ப்படாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்வதில்லை. ✡

அத்தியாயம்- 82 உ (தொடர்ச்சி..

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

## பீஷ்மரின் உபதேசம்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்.

பிதாமகர் பீஷ்மரை அணுகியதும் அனைவரும் அடக்கத்துடன் வணங்கிநின்றனர். பீஷ்மரின் அருகே கண்ணபிரான் அமரலானார். பாண்டவர்கள் வணங்கிய நிலையில் நின்றிருந்தனர். கண்ணபிரான் பீஷ்மரைநோக்கி "வீரரே அம்புகளால் அடியுண்ட நிலையிலும் உமது உடல் சோர்வடையாது இருக்கின்றதே, உம்மைப்போன்று புலனடக்கம் உடையவர்களைக் காண்பது அரிது. மரணத்தை வென்று வாழ்ந்திருக்கும் ஒருவரைக்காண்பது எளிதன்று. புலன்களையும் மரணத்தையும் வென்று நீர் வாழுகின்றீர். உறவினர் நண்பர்கள் எல்லோரையும் இழந்தமையால்த் தரும புத்திரன் பெரிதும் கவலையடைந்துள்ளார் எல்லாத் தர்மங்களையும் அறிந்துள்ள நீர் அறநெறியின் நுட்பங்களை அவருக்கு எடுத்துக்கூற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

கண்ணபிரானின் உரைகளைச் செவிமடுத்த பீஷ்மர் "கண்ண பரமாத்மாவே! தருமருக்கு தாங்கள் உபதேசம் செய்யாது என்னை உபதேசிக்கும்படி கூறுகிறீர்களே! இதன் காரணம் யாது?" என வினாவினார். "பீஷ்மரே! உமது புகழ் இன்னும் அதிகரித்து நிலைநிற்க வேண்டும் என்பதற்காகவே உம்மை உபதேசிக்கும்படி கூறியுள்ளேன்" என்று கண்ணபிரான் பதிலுரைத்தார். அதுமட்டுமன்றி "நீர் கூறும் பதில்கள் வேதங்களைப்போன்று பூமியில் நிலைபெற்றுப் பெருமை பெற்று விளங்கும்" என்றும் ஆசியளித்தார். கண்ணனின் பதில் மொழிகளை செவிமடுத்த பீஷ்மர் "கேசவரே தருமர் என்னிடம் வந்து கேட்கும் தருணத்தில் யான் அவற்றை அவருக்கு உபதேசித்து அருளுவேன்" என்று கூறலானார். அப்பொழுது கண்ண பிரான் "பீஷ்மரே! போரில் உறவினர், நண்பர்கள், பெரியோர்கள் என்று பலரையும் கொன்றொழித்த காரணத்தினால் உம்மை நெருங்க வெட்கப்படுகின்றார் தருமர். அதுமட்டுமன்றிச் சாபம் ஏற்படுமோ என்றும் அச்சமடைகின்றார்" என்றும் இயம்பலானார் கண்ணபிரான். அதற்குப் பீஷ்மர் "கண்ணா! போரில் பகைவர்களை அழிப்பதே யுத்ததர்மம்.

☸ நல்லாருடன் கூடி இருப்பது சொர்க்கத்தில் இருப்பதற்குச் சமம். ☸

தன்னை எதிர்ப்பவர் யாரா யிருந்தாலும் அவர்களை வெல்லுவதே அரசதர்மம். இதில் அஞ்சுவதற்கு என்ன உள்ளது? என்று வினாவினார்.

பீஷ்மரின் உரைகள் செவியில் விழுந்ததும் மிகவும் அடக்கத்துடனும் பணிவுடனும் சென்று அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார் யுதிஷ்டிரர். பின்னர் பீஷ்மரை விழித்துப் ''பிதாமகரே! அரச தர்மத்தை ஆதாரமாகக் கொண்டே நாட்டின் அறநிலை நிலைநிறுத்தப்படுகிறது. அரசன் அரச பரிபாலனம் செய்வதனைப் பொறுத்தே நாட்டின் நலம் நிலைநிறுத்தப்படுகிறது. எனவே அரசதர்மத்தைப் பற்றி எனக்கு உபதேசித்து அருள வேண்டும்'' என்று மிகவும் பவ்வியமாகக் கேட்டுக் கொண்டார் யுதிஷ்டிரர்.

## அரசதர்மம்

யுதிஷ்டிரரின் வேண்டுதலுக் கிணங்க பீஷ்மர் கூறத்தொடங் கலானார். ''மைந்தனே! மன்னன் ஒருவன் எப்பொழுதும் விடாமுயற்சி யுடையவனாயும், ஊக்கமுடைய வனாயும், தெய்வநம்பிக்கை உடைய வனாயும் இருத்தல் வேண்டும். அரசனானவன் சத்தியத்தில் பிடிப்புள்ளவனாய் வாழ்தல் வேண்டும். அரசகருமங்கள் சிலவற்றைத் தவிர்த்து மற்றும் நேரங்கள் எல்லாவற்றிலும் மன்னன் உண்மை பேசவேண்டும். மன்னன் சாந்தகுணம் உள்ளவனாக இருக்க வேண்டும். ஆனால் தீமைகள், அக்கிர மங்களைக் காணும்போது கொடிய குணம் உள்ளவனாக இருக்க வேண்டும். குடிமக்களையும் அந்தணர் முதலானவர்களையும் காப்பாற்றும் கடப்பாடுடைய மன்னன் தருமத்தை மீறி அவர்கள் நடக்கும்போது தண்டனை வழங்க வேண்டும். கர்ப்பவதியான ஒரு பெண்போல் வேந்தன் இருத்தல் வேண்டும். தன் நாவின் சுவைக்கு ஏற்ப உண்ணாது உடல்நலம் கருதி உண்ணும் கர்ப்பவதி போன்று மன்னனும் தனது நலம் கருதாது உலகநலம் கருதி நடத்தல் வேண்டும்.

பணியாளர்களுடன் மன்னன் கவனமாகப் பழகுதல் வேண்டும். பணியாளர்களை சமமாகப் பாவித்துப் பழகுவதால் அவர்கள் மன்னனுக்கு அடங்கி நடக்க மாட்டார்கள். புத்திமதி கூற முற்படுவார்கள். எனவே பணியாளர்கள் விடயத்தில் மன்னன்மிகவும் கவனமாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அரச இரகசியங்களை மிகவும் பொறுப்பானவர்களுடன்தான் பகிர்ந்து கொள்ள வேண்டும். இரகசியங்கள் வெளிப்படாது காப்பாற்ற வேண்டும்.

✡ பிறவி எடுத்த எந்த உயிரும் இன்பதுன்பங்களிலிருந்து தப்பமுடியாது. ✡

அரச உறுப்புக்கள் எவற்றுக்காயினும் ஒருவன் தீங்கு ஏற்படும்படி நடந்துகொண்டால் அவனைப் பாரபட்சமின்றித் தண்டிக்க வேண்டும். கூலி முதலியவற்றைக் காலக் கிரமத்தில் கொடுக்கவேண்டும். வருமானமற்றவர்களை மன்னன் கவனித்துப் பாதுகாக்க வேண்டும். தந்தை வீட்டில் பிள்ளைகள் அமைதியாக வாழ்வது போன்று குடிமக்கள் ஆனந்தமாக வாழ வழி செய்ய வேண்டும்.

விடாமுயற்சியுள்ள மனிதன் பண்டிதர்களைவிட மேலானவன். வீரமுள்ள மன்னனையே பண்டிதர்கள் போற்றுவார்கள். முயற்சி இல்லாத மன்னன் அறிவாளியாக இருந்தாலும் பயனில்லை. ராஜ்யத்தை ஆள்வது என்பது மிகப்பெரிய விடயம். எனவே சிந்தித்து நடந்து கொள்ளுதல் வேண்டும். குருகுலத் தோன்றலே அரசனுக்குரிய ஒழுக்கப் பண்புகளைப்பற்றிக் கூறியிருக்கிறேன். இனி ஏதாவது சந்தேகம் இருப்பின் அவற்றை நீ கேட்டால் அதற்குப் பதில் கூறுகிறேன்" என்று பீஷ்மர் உரைத்தார்.

பீஷ்மரின் உரைகளைச் செவிமடுத்த பாண்டவர்களும் கண்ணபிரானும் அவரைப் பாராட்டி வணங்கி "பிதாமகரே சூரியன் அஸ்தமனம் ஆகும் நேரம் நெருங்கி விட்டது, நாளை வந்து தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம்" என்று கூறி விடைபெற்றேகினர்.

மறுநாட்காலை புலர்ந்ததும் தமது கடமைகள் முடித்துப் பீஷ்மரிடம் சென்றனர் பாண்டவரும் கண்ணபிரானும். சென்று அவரை வணங்கி நலம் விசாரித்துப் பின்னர் யுதிஷ்டிரர் "பிதாமகரே, எல்லா வருணத்தாருக்குமுரிய தருமங்கள் எவை? அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இவர்களுக்குச் சிறப்பாக உள்ள தருமங்கள் எவை? அரசு அபிவிருத்தி அடைவதற்குரிய முறைமைகள் எவை? குடிமக்களின் அபிவிருத்தி எதனால் அமைகிறது? என்பனவான வினாக்களை வினாவினர்.

யுதிஷ்டிரரின் கேள்விகளைச் செவியுற்ற பீஷ்மர் "மைந்தனே! முதலில் நான்கு வருணத்தாருக்கும் உரிய தருமத்தைக் கூறுகிறேன் கேள். கோபமின்மை, சத்தியம், தானம் செய்தல், வம்சவிருத்தி செய்தல், துரோகம் செய்யாமை, நேர்மைமிக்க வாழ்வை வாழ்தல், எளியோரைப் பேணுதல், சுத்தம் பேணுதல் என்பன எல்லா வருணத்தாருக்குமுரிய பொதுவான தர்மங்கள். அந்தணருக்குரிய விசேட தர்மமாவன, அடக்கமாக வாழ்தல், வேதம் ஓதுதல், ஓதுவித்தல் இவை மூன்றும் அந்தணரின் விசேட தர்மங்கள். மன்னருக்குரிய விசேட தர்மங்களாவன, தானம் கொடுத்தல், வேள்விகளை செய்வித்தல், குடிமக்களைக் காப்பதும், தீமைகளை அழிப்பதும் மன்னரது தலையாய கடமைகளாகிறது. வணிகர்களின்

தர்மமாவது, தானம் செய்தல், நேரிய வழியில் பொருளீட்டல், யாகம் செய்வித்தல், வேதம் ஓதுவித்தல், பசுக்களைப் பேணுதல் என்பன வாகும். மேற்கூறப்பட்ட மூன்று வருணத்தாருக்கும் உதவுவதே சூத்திரரின் கடமையாகிறது. எல்லாத் தருமங்களுக்கும் ராஜதர்மம் ஆதாரமாக விளங்குகிறது.

இவற்றையெல்லாம் மிகவும் சிரத்தையுடன் செவிமடுத்த யுதிஷ்டிரர் மீண்டும் "பிதாமகரே, அரசனைத் தெய்வத்தின் அம்சமாக அந்தணர்கள் கூறி இருக்கிறார்கள். இதன் காரணத்தை எனக்கு விளக்கியருள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். யுதிஷ்டிரரின் கேள்விக்கு பதில் கூறலானார் பீஷ்மர். "அறிவிற் சிறந்த தர்மனே! தருமம் (அறம்) உலகில் நிலைத்திருப்பது மன்னனின் ஆட்சிமுறைமையால் ஆகும். அரசன் இல்லாவிடில் மக்கள் அதர்ம வழியில் நடக்க முற்படுவார்கள். பலம் குன்றியவர்களின் பொருளைப் பலம் மிக்கவர்கள் அபகரித்துக் கொள்வார்கள். களவு அதிகரிக்கும், சொத்துடமைகள் அநியாய மாக்கப்படும், வாணிபமும் நியாயமான முறையில் நடைபெற மாட்டாது, தர்மக்குறைவு ஏற்படு வதினால், தாய், தந்தை, குரு முதலானோரும் துன்பத்துக்குள்ளா வார்கள், மக்களும் அகாலத்தில் மடிவார்கள், மிருகங்களும் பறவையினங்களும் மாறுபட்ட நிலையில் வாழும் ஜனங்கள் கட்டுப்பாடின்றி நடக்க முற்படுவதனால், சட்டம், ஒழுங்கு முறைகள் மீறப்படும். இதனால் அமைதிகுன்றி சச்சரவுகள் ஏற்படும். நாட்டில் வறுமையும், நோயும் அதிகரிக்கும். மன்னன் பாதுகாவல னாக இல்லாதவிடத்தில் மக்கள் அவதிப்பட்டு அலைக்கழித்து துன்பப்படுவார்கள். ஆகவே நாட்டில் அறம் நிலைக்கக் காரணமாக உள்ள மன்னன் தெய்வ அம்சமாகிறான். (தொடரும்...

### பாவமும் புண்ணியமும்

சொல்வதனால் குறைந்து போகும் பொருட்கள் இரண்டு; அவைகளாவன; புண்ணியமும், பாவமுமாகும். நீ செய்த புண்ணியங்களை தருமங்களை நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும்.

நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும். குறைய வேண்டியது பாவம்; நிறைய வேண்டியது புண்ணியம். ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே; பாவத்தைக் கூறு.

✡ பெரிதாக வாக்களிப்பதைவிட சிறிதளவு கொடுப்பது மேல். ✡

சந்நிதியான்

உ

(தொடர்ச்சி..

# அருணகிரி சுவாமிகள் அருளிய

# கந்தரலங்காரம்

திரு சி. வேலாயுதம் அவர்கள்

**இயம பயம் ஒழியவேண்டும்.**

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடக்கும் பிரான்ம ருகா கொடுஞ் சூர னடுங்க வெற்பை
யிடிக்குங் கலாயத் கனிமையி லேறு மிராவுத்தனே.

எவரும் படிக்கும் உனது திருப்புகழை நானும் கொண்டாடிப் படிப்பேன். ஆதலின் யமன் வந்து பாசக்கயிறு வீசி எனது உயிரைப் பிடிக்குந் தருணத்தில் காளிங்கன் என்னும் பாம்பின்மீது நின்று கூத்தாடும் கண்ணபெருமானின் மருமகனே! கொடிய சூரனும் நடுங்கும்படி கிரௌஞ்ச மலையை இடித்த ஒப்பற்ற மயில் மீதேறும் சேவகனே! நீ எழுந்தருளி வந்து என்னை அஞ்சேல் என்று அபயம் தருவாயாக. உலக பாசம் உடையவர்க்கே இயம பாசம் உண்டு.

இயமன் உயிர்கவர வரும்போது உன் திருப்புகழைப் பாடுவேன். அப்போது என்முன்தோன்றி அஞ்சாதே என்றபயம் தருவாய். மரணகாலம் திருப்புகழ் படிக்கும் மரபும் இதுவேயாகும்.

**ஈகையோடு தவம் புரிக .**

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினு வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

உலகத்தவரே! வறிஞர்க்கு நீங்கள் வழங்கியது இறுதியிற் செல்லும் தொலையாத வழிக்கு உங்களைத் தேடிவருகின்ற கட்டுச்சாதமும் தகுந்த வழித்துணையுமாகும். உம்மிடம் வந்து இரந்தவருக்கு இலைக்கறியேனும் சமைத்த பொருள்களில் எதையேனும் பங்கிட்டுக்கொடுத்து கிரவுஞ்ச கிரியானது ஆறு பாகங்களாக பிளவுபட்டு எழுமாறு வேற்படையை எடுத்த கந்தவேளை அன்போடு தொழுது நிலைபெற்ற பெரிய தவத்தைப் புரிவீராக.

நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள்.

சிகராத்திரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுந் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

யுத்தத்திற்குரிய பாசக்கயிற்றினை ஒத்த பாம்பின் படத்தின் மீதுள்ள முடிகளை துகளாக்குதற்குரிய சிறகுகளையுடைய மயிலை ஊர்தியாக உடையவனே! அரசனே! என்றும் இளமையுடையவனே! அடியாரின் உள்ளமாகிய குகையில் இருப்பவனே! அரக்கர்களிடம் வெறுப்புடையவனே! தீரனே! தூய குணமுள்ளவனே! சிகரங்களையுடை கிரவுஞ்ச கிரியைப் பிளவு செய்த நினது வேலையும், சேவற்கொடியையும் செந்தமிழ்க் கவிகளால் துதிக்க விருப்பத்தை எனக்குத் தந்தருள்வாய்.

முருகனைப் பாடலும் ஈகையும் இல்லார் ஆயுள் வீணே.
வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை மெய்யன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடக் கிலேசித்து வாழ்நாளை வீணாக்கு மாய்பவரே.

குறவர் குலத்தில் வளர்ந்த வள்ளியம்மையாரின் தனங்களை விரும்பும் முருகக் கடவுளை உண்மையான அன்பினால் உள்ளம் உருகிப் பாடித்துதித்து கையிற் பொருள் இருக்கும் போதே ஏழைகட்கும், புண்ணியச் செல்வர்களுக்கும் கொடாதவர்கள் பாவ வழியிற் பொருளைத்தேடி தானும் அனுபவிக்காமல் பிறரையும் அனுபவிக்க விடாமல் மண்ணிற் புதைத்து வைத்து திருடர்களுக்குப் பறிகொடுத்து அதனால் உள்ளம் திகைப்புற்று உடல்மெலிந்து மனம் வாடி ஆயுளை வீணாகக் கழிப்பவரேயாவார்.

### *உள்ளமே கோவில்*

கோயிலில் புறக்கண்கொண்டு கண்ட இறைவனை
உள்ளமாகிய கோயிலில் உள்ளக் கண்ணால் காண முயற்சி செய்.
இறைவனுடைய சொரூபம் உனது உள்ளக் கமலத்தில்
விளங்குவதாக, அந்தக் காட்சிதான் சிறந்த காட்சி, அக்காட்சியில்
வரும் இன்பத்தை வேறு எதனாலும் பெற முடியாது.

அறிவின்மை இழிவானது. அதைவிட இழிவு அறிய மனமில்லாமை.

உ

# அகவை எண்பதில் காலடி பதிக்கும்

## அன்னைக்கு ஓர் வாழ்த்து

(சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 80வது பிறந்தநாள் வாழ்த்து)

மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் அவர்கள்.

தவத்திற்கு தவத்தை தந்த
தவ யோகி சிவத் தமிழ் செல்வி
சிவத் திரு வடிவ மாகி
செம்மாது சக்தி யாகி
புவத்தின் ஒளியு மாகி
புண்ணிய நதியு மாகி
நவ கோடி கோடி ஆண்டு
நற்பணி ஆற்றி வாழ வாழ்த்துகிறோம்.

விழிகளின் கருணை யாலே
வெற்றிகள் கோடி சேரும்
அழிவிலா ஆன்மத் தாலே
அடர் கோடி செல்வம் மல்கும்
ஒழி விலா ஒடுக்கத் தாலே
உள்ளொளி வளி யினாலே
எழில் கோடி புவனம் பூக்கும்
எங்களின் அம்மா போற்றி

பக்திக் கோர் பாற்கடல் நல்
பாரெல்லாம் சமமாய் எண்ணும்
சக்தியாய் மதங்கள் சாதி
சாராத நெருப்பாய் விஞ்சிமுத்திசேர் பேறு பெற்ற
மோனத்தின் ஞானத்தின் கோ
பக்தி யாய் மணந்த செங்கோல்
பல்லாண்டு வாழி தாயே!

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

திருவாதவூரடிகள் பாண்டிய மன்னனின் முதன் மந்திரியாகவிருந்த வேளையிலே குதிரை கொள்ளச் சென்றதும் இறைவன் குருவடிவாகி வந்து குருந்தமரத்தடியில் வீற்றிருந்து, அவரை ஆட்கொண்டதும் அனைவரும் அறிந்த கதையாகும்.

அப்படி ஆட்கொள்ளப்பட்ட போது, அவர் பெற்ற அனுபவத்தைத் திருவாசகத்தில் பல்வேறு இடங்களிலும் பாடியுள்ளதைக் காணலாம். இறைவன் குருவடிவாகி வந்திருந்தபொழுது, திருவாதவூரர் தாம் குதிரை கொள்ளச் சென்றதையே மறந்து, அவரது திருவடிகளைப் பிரியாது குருவுடனேயே தங்கிவிட்டார். அது மட்டுமல்ல குருவைத் தொழுவதும் அழுவதும் அரற்றுவதுமாக பக்தி மேலிட்டு செயற்பட்டார். அவர் நடந்து கொண்டது போலவே அந்த நிலையை அடைந்த எவரும் நடந்து கொள்வர். அற்புதமான அந்நிலையை போற்றித் திருவகவலில் அழகாக இலக்கிய நயத்துடன் மாணிக்கவாசகர் விபரித்துக் கூறியுள்ளார்.

அருமையான பரம் பொருளாகிய ஒப்பற்றவன் உலகிற்கு வந்து குருவாகி அருள்புரிந்த அந்தப் பெருமையை எல்லோரும் பெருமையென்று கருதமாட்டார்கள்.

மிக எளிமையாகக் காட்சி தரும் பெரியவர்களை அவர்கள் வாழும் காலத்தில் பெரும்பாலோர் மதிப்பதில்லை. நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் தாங்கள் மதிப்பிற்குரியவர்கள் என்று காட்டிக் கொள்பவர் குணத்தில் குன்றியவர்களாக இருந்தாலும் அவர்களை மதிப்பார்கள்.

குருவாக மரநிழலிலே அமர்ந் திருப்பவரை உணர்ந்தால் மட்டுமே அந்தப் பெருமையை நம்மால் உணரமுடியும். அல்லது அலட்சியமாகப் போய்விடுவோம்.

பெரியவர் ஒருவர் நமது வீடு தேடி வருகிறார். அதை இரண்டு விதமாக நினைக்கலாம். “நம்மைத் தேடி இவர் வந்திருக்கிறாரென்றால் நாம் மதிப்பிற்கும் பெருமைக் உரியவர்” என்றும் நினைக்கலாம். “என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி இவர் வந்திருக்கிறாரே. இவருடைய பெருந்தன்மையை என்னென்பது?” என்றும் சிந்திக்கலாம்.

இறைவன் குருவடிவமாக எழுந்தருளிய பெருந்தன்மையைக்கூட இவ்வாறு இருவகையில் நோக்கலாம்.

மாணிக்கவாசகரோ இறைவனின் பெருமையை பெருமையாகவே எண்ணினார்.

இறைவனின் திருவடிகளைப் பிரியாது பின்னும் முன்னும் அவர் திரிந்தார். நிழல் எப்படி உருவைப் பிரியாது பின்னும் முன்னும் தொடருமோ அப்படி அவர் பிரியாதிருந்தார்.

அதுமட்டுமா? இறைவன் காட்சியருளிய திசையைநோக்கி கரங்களைக் கூப்பி மனம் மகிழ்ந்து மலர, நெக்குருகி நிற்கின்றார். அது சாதாரணமான உருக்கமல்ல. என்பு நைந்து உருகும் வகையில் பக்திவயப் பட்டு நிற்கிறார். அதாவது நெக்குருகு வது என்று கூறும் நிலையையும் கடந்த அதிகமான உருக்கங் கொண்ட நிலை. அதனால் ஓர் ஏக்க மேற்படுகிறது. அன்பாகிய ஆறு கரைகடந்து ஓடுகிறது. புலன்கள் எல்லாம் குருநாதரில் ஒன்றித்து விட ''நாதா''என்று அரற்று கின்றார்.அவருக்கு பேச்சு தடுமாறு கிறது. உரோமம் சிலிர்த்துப் போகிறது. அக்காட்சியைக் கண்டு கண்கள் ஆனந்திக்க கண்ணீர் மல்கியது.

திருவாதவூர் அடிகள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட போது அவரது நிலை இவ்வாறே இருந்திருக்கவேண்டும். அதனாலேயே

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலதுபோல
முன்பின் னாகி முனியா(து) அத்திசை
என்புனைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்ப

என்று போற்றித் திருவகவலில் திருவாதவூரடிகள் பாடியுள்ளாரெனக் கருதலாம். இவ்வடிகள் இறைவனால் அவர் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தை மிகச் சிறப்பாக விவரிக்கின்றன.

---

கந்தசஷ்டிகால விசேட நிகழ்விற்கு நிதியுதவிய அன்பர் விபரம் (தொடர்)
உரிமையாளர் றஜனி பீடா ஸ்ரோர்ஸ் உடுப்பிட்டி.

உ

# இறைவனுக்கு அஞ்சுவதே அறிவின் தொடக்கம்

(கார்த்திகை ஞானச்சுடர் 2004: பக்கம் 04இல் உள்ள பொன்மொழி)

திரு கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்.

மேற்படி இதழில் உள்ள இந்த சத்தான வாக்கியம், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் விருந்தாக அமைகின்றது. குறிப்பிட்ட அறுபது வீதமானவர்களைத் தவிர, ஏனைய நாற்பது வீதமானவர்கள் இறைவனுக்கு அஞ்சிவாழ முடியாதவர்களாகக் காலங்கழிக்கின்றார்கள். ஐம்பதுகளில், அறுபதுகளில், எழுபதுகளில் தொண்ணூற்று ஐந்து வீதமாக இருந்த இறைவன் மீதான அச்சம், அதன் பின்னர் வந்த ஆண்டுகளில் படிப்படியாக குறைந்து வருகின்ற அபாக்கியத்தை உலகம் பெற்று வருகிறது. இதனால் அறிவுள்ள வர்களுக்குத் தட்டுப்பாடும், அறிவுக்குத் தட்டுப்பாடும் மிக விரைவில் உலகத்தைப் பதம் பார்க்கப் போகின்றது.

இத்தகு நிலையை யார் அல்லது எந்தநாடு உணரும் பட்சத்தில் 'அறிவுலகம்' வென்று இறையாசி கிடைக்கும். இறைவனைப் புறந்தள்ளி எந்தக்காரியமும் வெற்றிபெற்ற சரித்திரம் இல்லை. கண்ணுக்குப் புலப்படாத காற்றினைப் படைத்தவன் எமது கண்களுக்குள் அகப்பட வேண்டுமாயின் பிரார்த்தனை, வழிபாடு, தியானம், தொண்டு, பாராயணம் அவசியம். இவைகளூடாகவே அறிவு- மையங் கொள்கிறது. நாற்பதுநிமிட நேரம் ஓரிடத்தில் மனிதனை ஒருமுகப்படுத்தி இருக்கமுடியாத ஒரு சமுதாயம் உருவாகி வருகிறது. நூறு வருட வாழ்க்கையைப் படமாக்கி, மூன்றுமணி நேரம் ஓடும்போது பொறுமையாக இருந்து மூன்றுமணி நேரம் பார்க்கின்ற கூட்டம், மூன்று தேவாரத்தினைப் பாட முடியாதவர்களாக இருக்கின்றார்கள். முப்பது சினிமாப் பாடல்களைப் பாடுவதற்கும், எழுதுவதற்கும், நடிப்பதற்கும் தயாராக இருக்கின்றார்கள். இலகுவாகக் கெட்டுப்போவதற்குத் தயாராகி விடுகிறார்கள். காரணம் நோகாத பணத்தில், வாகாய்ப்பறந்து, ஆகாயத்தினைத் தொட்டு சுவர்க்கத்தினை அடைய எண்ணிக் கொள்கின்றார்கள். இறைவனுக்கு அஞ்சுபவன், தனது அறிவுக்கு உரமாகக் கிடைத்ததே போதும் என்று, தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் நீடுவாழச் செய்கின்றான். அறிவுக்குப் பக்தி, பணிதல், பயபக்தி, குருவிசுவாசம், அடக்கம், நல்லொழுக்கம்

பிரதானமான காரணிகளாகும். வயதுவந்தவர்கள், பிள்ளைகள், அயலவர்கள், நண்பர்கள், பெற்றோர்கள் யாவரும் சேர்ந்து வயது வந்தவர்களுக்கான படங்களை ஒருங்கேயிருந்து பார்க்கும் போது, இறைவனை யார் சிந்திக்கத் துணிகிறார்கள்? படம், நாடகம் முடிந்த பின்னர் சாமிக்கு விளக்கு ஏற்றுகின்ற நிலையில் யார்தான் இறைவனுக்கு அஞ்சப்போகின்றார்கள். வருத்தங்கள். பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள் சண்டைகள், யுத்த சூழல் வரும்போது, அல்லது திருமணம் கூடும் போது, பிரசவத்தின் போதுதான் இறைவனுக்கு அஞ்சுகின்ற அறிவு துளிர்விடுகின்றது. வீதிகளில், சந்திகளில் கூடிநிற்கும் போது, வேகமாய் வாகனத்தில் சவாரி செய்யும்போது இறையச்சம் அறவே இல்லாமல், அறிவு பூச்சிய நிலைக்கு வந்துவிடுகிறது. இறைவன் மனிதனிடம் தேடிவரும் போது, மனிதனைக் காணமுடியவில்லை. மனிதன் இறைவனைத் தேடிவரும் போது, இறைவன் அவன்பின்னே இருக்கின்றதை அவனால் உணர முடிவதில்லை. என்ன பரிதாபம்? "ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளி யானே"- என மாணிக்கவாசகர் கூறுவது நோக்கத்தக்கது.

ஒரு காலத்தில் ஓலைக் குடிசையில் வாழ்ந்தவர்கள் இறைபக்தி, மரணிக்காத மனிதப் பண்பு, மரியாதை என வாழ்ந்து இப்போ மாடமாளிகையில் வாழ்கின்றார்கள். அப்போ மாட மாளிகையில் வாழ்ந்தவர்கள் ஒதுங்கிப்போயிருக்கின்றார்கள். இப்போ மாடமாளிகையில் வாழ்பவர்கள் (எல்லோருமல்ல) இறைவனை உள்ளே வருமாறு கூப்பிடுகிறார்கள். ஆனால் படலை பூட்டப்பட்டு, நாய் கட்டப்பட்டிருக் கின்றது. இறைவன் வாசலில் வந்து திரும்பிவிடுகின்றான். வாசல், வாகனங்களின் தரிப்பிடமாகி விடுகின்றது. மார்கழி மாதத்திலாவது கோலம் போடக்கூடாதா? இவ்விடயத்தில் பல பெண்கள் தோற்று விடுகிறார்கள். காரணம் பலர் பட்டம் பெற்றுப் பதவியுயர்வுக்காகக் காத்திருக்கின்றார்கள். மெழுகு வதற்கோ, கோலம் போடுவதற்கோ, குனிவதற்கோ முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அதற்குத் தயாராகவும் இல்லை. போதனைக்குத் தயார். சாதனைக்குத் தயாரில்லை. கோலம் போடுதல் இறைவனுக்குகந்த தருமகாரியம். அறிவுபூர்வமாகச் சிந்திக்க முடியவில்லை. இறைபயம் இருந்தால், வாழ்க்கையில் நம்பிக்கை யிருந்தால், அறிவு நிரம்ப வேண்டுமெனில் உனது வீட்டினைக் கோவிலாக எண்ணி வழிபடு! வீட்டினைப் பக்திமயமாக்கு! வானொலி, தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தத்தினை உடனடியாகக் குறைத்துவிடு! அறிவுடன் ஆண்டவன் தேடி வருவார்.

✡ பிறருடைய குற்றங்களைப் பாராமல் குணங்களை மட்டுமே பார். ✡

உ

**திருவாசகம்**

**ஸ்ரீமத் சபாரத்தினம் தொண்டர் சபை**

## ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் 17வது குருபூசையும், வாகீச கலாநிதியின் ஆய்வுநூல் வெளியீடும்.

இடம்:- சரஸ்வதி மண்டபம் பம்பலப்பிட்டி.

காலம்:- தாரணவருடம் தை 3ம்நாள் (16.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணி

தலைவர்:- "திருப்பணித்தவமணி" சி. தியாகராசா (S.T.R) அவர்கள்.

பிரதம விருந்தினர்:- திரு ப.க. பரமலிங்கம் அவர்கள் (செயலாளர் காணி விவசாய அமைச்சு. திணைக்களம். வட.கிழ மாகாண அமைச்சு. திருகோணமலை)

சிறப்பு விருந்தினர்:- பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் (பேராதனை பல்கலைக்கழகம்.)

அருளுரை:- தவத்திரு நாகராஜன் சுவாமிகள்(குரு ஈஸ்வராலயம், மெய்யறிவு ஞானசபை பொள்ளாச்சி தமிழ்நாடு)
சுவாமி ஆத்மகனாநந்தர் (இராமகிருஸ்ணமிசன் கொழும்பு- 06)

திருவாசக பாராயணம், கூட்டுப்பிரார்த்தனை, திருமுறை தீபாராதனையுடன் நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் வரலாற்று நூலும் வெளியிடப்படும். மகேஸ்வரபூசை இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. தியாகராசா (S.T.R) தலைவர்
(திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை)

நூல் பிரதிகள் பெறவிரும்புவோர் 15/= ரூபா முத்திரையுடன் 100/= ரூபாவை செயலாளருக்கு அனுப்பி நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.


த. துரைராசா (செயலாளர்)
31A ஜானகிலேன்
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04

ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு பலவீனம் உண்டு.

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



2004 ஆம் ஆண்டு இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. திரு இ. சண்முக சுந்தரம் ஆசிரியர் புலோலியில் உள்ள தனது வீட்டில் அன்றைய பொழுதை ஓய்வாகவும் மகிழ்ச்சியுடனும் போக்கிக் கொண்டிருந்தார்கள். அன்றைய மதிய உணவை தனது மனைவி யுடனும் பிள்ளைகளுடனும் ஒன்றாக இருந்து அருந்தியதால் இரட்டிப்புச் சுவையுடன் உணவை உட்கொண்ட திருப்தியும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. இவ்வாறான மகிழ்ச்சியான சூழலில் சிறிது நேரம் ஓய்வெடுத்தபின் நேரத்தைப் பார்க்கின்றார். நேரம் 4மணி 15நிமிடத்தைக் காட்டியது.

தனது கற்பித்தல் தொடர்பாக புத்தகத்தில் குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பார்க்க வேண்டியிருந்த தால் திரு சண்முகசுந்தரம் ஆசிரியர் சம்பந்தப்பட்ட புத்தகத்தை எடுத்து அதனை வாசிக்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு திரு இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் அந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது எதிர் பாராத விதமாக அவரது மூக்குக் கண்ணாடி நிலத்தில் விழுந்து உடைகின்ற அந்தக்கவலைக்குரிய சம்பவம் நடைபெற்றது. ஆம் அவ்வாறு அவரது மூக்குக்கண்ணாடி நிலத்தில் விழுந்து உடைந்த அந்தச் சம்பவத்தால் அவரது மகிழ்ச்சி எல்லாம் நொடிப்பொழுதில் மறைந்து உள்ளத்தில் தாங்கமுடியாத துன்பம் ஏற்பட்டது.

அவர் மிகவும் கவனமாகப் பேணி நீண்டகாலமாக பயன்படுத்தி வந்த பொருள் என்பதுமட்டுமன்றி அவரது தொழிலுக்கு எந்தநேரமும் பயன்படுத்தவேண்டிய முக்கியமான ஒரு உபகரணமாகவும் அந்தக் கண்ணாடி அமைந்திருந்ததால் அதனை மிகவும் மதிப்புடனேயே திரு சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் பேணிவந்தார்கள். அது மட்டுமன்றி அவரது குடும்ப நிலவரத்தில் மீண்டும் அவ்வாறானதொரு கண்ணாடியை வாங்குவதென்பதும் அவருக்கு சிறிது சுமையாகவே இருக்கும் என்பதும் அவரது கவலையைக் கூட்டுவதற்கு இன்னொரு காரணமாகவும் அமைந்திருந்தது.

திரு இ. சண்முகசுந்தரம் ஆசிரியருக்கு இவ்வாறான ஒரு துன்பம் ஏற்படுவதற்கு யாரும் பொறுப்பல்ல. கண்ணாடி உடைந்த சம்பவம் தவறுதலாக ஏற்பட்ட ஒரு நிகழ்வு. ஆனாலும் நடந்து முடிந்த சம்பவத்தால் அவருக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது மட்டுமன்றி அதனை அவரால் ஜீரணிக்க முடியாத நிலையும் காணப்பட்டது. இந்நிலையில் மனதில் ஏதோ நினைத்தவராக கலங்கிய கண்களுடன் உடைந்த மூக்குக் கண்ணாடியை கைகளில் எடுத்துக் கொண்டு சுவாமி அறைக்குள் சென்றார்கள். அங்கே தனது குலதெய்வமான முருகப்பெருமானது படத்தின் முன்பு அந்த உடைந்த கண்ணாடியையவைத்து வழிபாடு செய்தார்கள். இவ்வாறு வழிபாடு செலுத்தியதன் மூலம் தனது பொறுப்பை தனக்கு மிகவும் வேண்டிய இன்னொருவரிடம் கையளித்துவிட்டது போன்ற ஒரு உணர்வு அவருக்கு ஏற்பட்டதுமட்டு மன்றி அவரது உள்ளத்தில் இருந்த துன்பமும் சிறிது குறைய ஆரம்பித்தது.

மறுநாள் அதாவது 2004-08-16 சந்நிதியானுடைய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகுகின்ற நாள். அன்றையதினம் வழமைபோல திரு இ. சண்முகசுந்தரம் ஆசிரியர்

அவர்கள் ஆலயத்திற்குச்சென்று உள் அன்புடன் சந்நிதியானை வழிபாடு செய்தார்கள். அவ்வாறு வழிபாடு செய்தபின்பு ஆலயத்தை விட்டு திரும்பும்பொழுது நீயே எனக்கு தஞ்சம் அப்பா! உனது அடிமையாகவே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் ஆனபடியால் தான் எனக்கு ஏற்படுகின்ற துன்பங்களை எல்லாம் என்னை அறியாமலே உன்னிடம் சமர்ப்பிக்கின்றேன் என்று தனக்குத் தானே கூறிக்கொண்டவராய் சந்நிதியான் ஆச்சிரமத்தை வந்தடைந்தார்கள். நீண்டகாலமாக ஆச்சிரமத்திற்கு வந்துசெல்லுகின்ற அன்பர்களில் திரு சண்முகசுந்தரம் ஆசிரியரும் ஒருவர் என்பதால் ஆச்சிரமத்திற்கு வந்த ஆசிரியர் அங்கே சிறிது ஓய்வாக இருந்த ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கின்ற பொழுதுதான் அந்த அற்புதமான சம்பவம் நடந்தேறியது. ஆம் வழமை போல ஆச்சிரமத்தின் சுவாமிகள் அங்கே காணப்படுகின்ற தனது மேசையின் அருகில் இருந்தவாறு திரு சண்முகசுந்தரம் ஆசிரியருடன் உரையாடிக்கொண்டிருந் தார்கள். அப்பொழுது கிருஸ்ண பிள்ளை என்ற அன்பர் அங்கே சுவாமிகளிடம் நேராகவந்து ஐயா இந்தாருங்கள் கண்ணாடி. நீங்கள் எனக்குத்தந்தது. இது எனக்கு அளவாக இல்லை. இதனை வேறு யாருக்கும் பொருந்தக் கூடியவர் களுக்கு வழங்குங்கள் என்றுகூறி தான் கொண்டுவந்த கண்ணாடியை சுவாமிகளிடம் வழங்கிவிட்டு திரும்பச் சென்றுவிட்டார்கள்.

மூக்குக்கண்ணாடி தொடர்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் மேற்படி உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்ததிரு இ.சண்முகசுந்தரம் ஆசிரியருக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. ஏதோ ஒரு நிகழ்வு நடக்கப்போகின்றதென்று அவரது உள்ளுணர்வு காட்டியது. உடலும் உள்ளமும் புல்லரித்தது. வாங்கிலில் அமர்ந்திருந்த ஆசிரியர் எழுந்து சுவாமிகளின் மேசைக்கு அருகில் சென்றார்கள். அந்தக் கண்ணாடியை என்னிடம் தாருங்கள் ஐயா எனக்கு பொருத்தமாக இருக்கின்றதா எனப் பார்ப்போம் எனக்கூறி அதனை வாங்கி அணிந்து பார்த்தார்கள். அணிவதற்கு மிகவும் அளவாக இருந்தது. இது அவருக்கு ஓரளவு நம்பிக்கையைக் கொடுத்தது. அருகில் இருந்த பத்திரிகையை எடுத்து தற்பொழுது அணிந்து கொண்டிருக்கும் கண்ணாடியினூடாக வாசித்துப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம் அவரது உடைந்த கண்ணாடியால் வாசிப்பது போன்ற தெளிவுடன் வாசிக்கக்கூடியதாக இருந்தது. அதே கண்ணாடியின் ஊடாக ஆச்சிரமத்தின் கடிகாரத்தைப் பார்த்தார்கள். சரியாக முதல்நாள் அவரது கண்ணாடி உடைந்து துன்பப்பட்டு உடைந்த

✡ வருந்துவதைவிட உறுகிகொள்வது நல்லது. ✡

கண்ணாடியை முருகப்பெருமானின் படத்தின்முன் வைத்து முறையிட்ட அதே நேரத்தை கடிகாரம் காட்டியது. சந்நிதியானின் கருணையை எப்படி வார்த்தைகளால் கூறுவதென தெரியாது மகிழ்ச்சியால் உறைந்து போய்விட்டார்கள். "ஆச்சிரமத்தின் சுவாமிகள் திரு சண்முகசுந்தரம் ஆசிரியருக்கே அந்தக் கண்ணாடியை வழங்கினார்கள். தற்பொழுது அந்த மூக்குக்கண்ணாடியின் உதவியுடனேயே தன்து இயல்பான கருமங்களை எல்லாம் திரு இ.சண்முகசுந்தரம் ஆசிரியர் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தற்பொழுது கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் சந்நிதிமுருகன்மீது சாதாரண நம்பிக்கை கொண்டவர் அல்ல. அசையாத நம்பிக்கை கொண்டவர். அவர் மேற்படி சம்பவத்தை குறிப்பிடும் பொழுது "முதல்நாள் அழுதேன் மறுநாள் அதேநேரம் சந்நிதியான் மூக்குக்கண்ணாடியை எனக்கு வழங்கியுள்ளான் இது அல்லவா அற்புதம்" என அடியேனிடம் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆம்! கடந்த 20 வருடங்களாக சந்நிதியானுடைய ஆலயத்திலேயே தங்கி கந்தசஷ்டி விரதத்தை தூய்மையாகவும் உண்மையான பக்தியுடனும் அனுஷ்டித்து வருகின்ற அன்பர் திரு சண்முகசுந்தரம் ஆசிரியர். அப்படிப்பட்டவர் சந்நிதியானிடம் "உன்னை நம்பித்தான் நான் வாழ்கின்றேன்" என்று கூறியபின்பும் சந்நிதியான் அதை மௌனமாக பார்த்துக்கொண்டிருப்பானா?.

ஓம் முருகா!

## வாசகர் கவனத்திற்கு

முதல் பத்து மலரிலும் வெளியிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக நடைபெற்ற வாசகர் போட்டிக்குரிய பேறுபேறுகள் வரும் 2005 தை மலரில் இடம்பெறும் என்பதையும் அவர்களுக்குரிய பரிசுகள் மாசி மாத மலர் வெளியீடு (25–02–2005) அன்று வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

உ

# வருடாந்த திருவாசக விழா 2004

பேரவையால் நடாத்தப்படும் வருடாந்த திருவாசக விழா 24-12-2004 வெள்ளிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக பூஜைகளைத் தொடர்ந்து நாயன்மார்களது திருவுருவப்படங்களும், திருவாசக ஏடுகளும் கொண்ட பீடம் அடியார்களின் சிவபுராண பாராயணத்துடன் ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டு, மேற்படி விழா ஆரம்பமானது.

விழாவிற்கு அருளுரை வழங்குவதற்கு வருகை தந்திருந்தநல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் திருவாசகத்தின் பெருமைகளையும், திருவாசகத்தை உள்ளம் உருகி ஓதும்போது நாம் அடையும் பயன்களைப்பற்றியும் பல கருத்துக்கள் மூலம் உணரச்செய்தார்கள்.

சிறப்புரை நிகழ்த்துவதற்கு வருகை புரிந்த சைவ சமய ஆசிரிய ஆலோசகர் கந்தசத்தியதாசன் அவர்கள்திருவாசகப் பதிகங்களில் உள்ள பல பாடல்களை எடுத்து சபையில் உள்ளோருக்கு பலவித உதாரணங்களோடு விளக்கியதுமட்டுமன்றி பல பாடல்களையும் தானே பாடியது போற்றுதற்குரியதாக அமைந்தது.

இறுதி நிகழ்வாக திருவாசகப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் பரிசளிப்பும் இடம்பெற்றது. விழாவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு முறையே ஞானபண்டித சேவா சுரபி வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை, யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்பு விரிவுரையாளர் அ. குமாரவேல், சிறப்புரை ஆற்றிய கந்தசத்தியதாசன் ஆகியவர்களால் பரிசு, பணம், சான்றிதழ் ஆகியன வழங்கப்பட்டன. பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் வழமைபோல பரிசுகள் வழங்கப்பட்டன.

## போட்டியில் வெற்றியீட்டி பரிசு பெற்றோர் விபரம்

### பிரிவு I தரம் 5 – 6

1ம் இடம்:- நாகேந்திரம் தேனுகா
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

2ம் இடம்:- விநாயகமூர்த்தி விதுர்சனா
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

3ம் இடம்:- சந்தானகுமாரசர்மா சக்திதர்ஷினி
கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்

### பிரிவு 2 தரம் 7 – 8

1ம் இடம்:- தர்ஷிகா ஸ்ரீதரன்
விக்னேஸ்வராக்கல்லூரி கரவெட்டி
2ம் இடம்:- சந்தானகுமாரசர்மா சக்திதாஜினி
ஸ்கந்தவரோதயக்கல்லூரி
3ம் இடம்:- மகேசன் சஞ்ஜீவா
மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை

### பிரிவு 3 தரம் 9 – 10

1ம் இடம்:- இராஜலிங்கம் தர்சனா
அராலி இந்துக் கல்லூரி
2ம் இடம்:- ஜனரஞ்சினி துரைராசா
கம்பர்மலை அ. த. க. பாடசாலை
3ம் இடம்: தங்கராசா இந்திக்கா
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## திருவாசக விழாவிற்கு ஆதரவு நல்கியோர்

இ. உருத்திரா சட்டத்தரணி பருத்தித்துறை
சி. தங்கவடிவேலு சிற்றிவெதுப்பகம் நெல்லண்டை
A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி
பொ. பரஞ்சோதி வத்தனை
க. இரத்தினம் இளைப்பாறிய கிராமசேவையாளர் கரணவாய்
சி. நாகலிங்கம் லிங்கம்ஸ் கரணவாய்
ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் கரணவாய்
ஸ்ரீ. குகன் கரணவாய்
சி. சரவணப்பெருமாள் கரணவாய்
க. அரியகுட்டி கரணவாய்
வ. சிவலிங்கம் கரணவாய்
சே. ரவீந்திரன் இமையாணன்
Dr. சி. கதிரவேற்பிள்ளை கரவெட்டி
வ. ஆ. தங்கமயில் நில அளவையாளர்
ஆ. யோகதாசன் பூதவராயர் கோவிலடி உரும்பராய்.


ஒவ்வொருவரிடமும் கேள் சிலரிடம் மட்டுமே சொல்.

மேற்படி விழாவினை சிறப்பாக நாம் செய்வதற்கு ஆதரவு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல சந்நிதிவேலவனது அருள் பூரணமாக கிடைக்கவேண்டும் என பிரார்த்திப்பதோடு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

-பேரவை-

# நீத்தார் பெருமை

**புத்தொளி ந. சிவபாதம்**



யாழ் இலக்கியவட்டத்தை ஆரம்பித்து அதனைச் செயற்படுத்துவதில் முக்கிய பதவிகள் வகித்து இலக்கியவட்டத்திற்கு சேவையாற்றியது போல சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான "ஞானச்சுடர்" என்ற எமது ஆத்மீக சஞ்சிகைக்கும் அவர் காத்திரமான பங்காற்றியுள்ளார்.

கடந்த ஏழு வருடங்களாக ஆத்மீகசஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் சஞ்சிகைக்கு ஆரம்பகாலம் முதல் மிகவும் காத்திரமான ஆக்கங்களை வழங்கிவருகின்ற ஓர் அன்பராக புத்தொளி சிவபாதம் அவர்கள் விளங்கிவந்தார்கள். இந்தவகையில் ஞானச்சுடர் சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கியவர்களை கௌரவித்து பாராட்டுகின்ற இரண்டு நிகழ்வுகளிலும் புத்தொளி அவர்கள் கௌரவித்து பாராட்டப்பட்டார்கள். அதுமட்டுமல்ல அந்த பாராட்டுநிகழ்வில் பாராட்டைப்பெற்ற எழுத்தாளர்கள் சார்பில் பதிலுரை வழங்குகின்ற பணியையும் ஐயா அவர்களே மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

எமது மாதாந்த ஞானச்சுடர் சஞ்சிகையை மாதாந்தம் வெளியிடுகின்ற பொழுது ஆற்றலும் அநுபவமும் வாய்ந்த பெரியோர்கள் அதற்கு மதிப்புரை வழங்குவது வழக்கம். அந்த வகையில் இரண்டு தடவைகள் எமது மலருக்கான மதிப்புரையையும் ஐயா அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

புத்தொளி ஐயா அவர்கள் எழுத்தாளர்களை தேசத்தின் பொக்கிஷங்களாக கருதியதுடன் அவர்கள் அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களாக விளங்க வேண்டுமென்ற உணர்வுடன் செயற்பட்டார்கள். இந்த வகையில் ஞானச்சுடர் சஞ்சிகையில் பல பெண் எழுத்தாளர்களும் இடம்பெற்றிருப்பதை மிகவும் உற்சாகத்துடன் வரவேற்று அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் அவர் தவறவில்லை.

ஐயா அவர்கள் பல தசாப்தங்களாக எமது சமூகத்துடன் பல்வேறு வகையான தொடர்புகளை வைத்திருந்தமையால் எமது சமயம், எமது சமூகம் என்பவற்றின் பலம், பலவீனம் என்பவற்றை நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். இதனை அடிப்படையாகக்கொண்டு எமது சமயத்தையும் மக்களையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நுட்பங்களை உணர்ந்து அதன்படி தானும் செயற்பட்டு மற்றவர்களையும் செயற்பட வைத்த ஒரு செயல்வீரனாகவும் அவர் விளங்கினார்.

சிவபாதம் ஐயா அவர்கள்போன்ற பெருமதிமிக்க உள்ளம் படைத்த பெரியோர்களது தொடர்பும், ஆதரவும், ஆலோசனையும், வழிகாட்டலுமே ஆச்சிரமம், பேரவை என்பவற்றை நாம் சிறப்பாக செயற்படுத்தக்காரணமாக அமைந்துள்ளது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரமம்
பேரவையின் சார்பில்
திரு. ந. அரியரத்தினம்



26- 12- 2004 அன்று அகால மரணமடைந்த

## முத்துக்கிருஸ்ணர் அற்புததேவன்
## (மாயவர்)
### (அச்சு இயந்திரம் திருத்துநர்)

எமது பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற மாத மலராகிய ஞானச்சுடர் ஆரம்பிக்கின்ற காலத்தில் முத்துக்கிருஸ்ணர் அற்புததேவன் (மாயவர்) ஆற்றிய சேவையின் பயனாக இன்று நாம் மலரின் ஏழாண்டினை நிறைவு செய்யவுள்ளோம். இக் காலங்களில் அவர் ஆச்சிரமத்தோடும் பேரவையோடும் இணைந்து சிறப்பாகச் செயலாற்றியதை என்றும் மறக்க முடியாது. கடற்கோளினால் அகால மரணமடைந்த அற்புததேவனுக்கும் அவரது புதல்வர்களுக்கும் சந்நிதி வேலவனின் அருளாசியோடு எமது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

*சந்நிதியான் ஆச்சிரமம்.*

உ

# தை மாத வாராந்த நிகழ்வுகள்

07-01-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**விடயம்:- மங்கள இசை**

**வழங்குபவர்:- மறவனூர் T.M வாசகர் குழுவினர்**

14-01-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**அறிமுகவுரை:-** ஞானபண்டித சேவாசுரபி Dr சி. கதிரவேற்பிள்ளை

**விடயம்:- பண்ணிசை**

**வழங்குபவர்:-** சி. தில்லைமணி பக்கவாத்திய சகிதம்

(நல்லை ஆதீன ஓதுவார். யா/மாநகர மின்சாரப்பகுதி.)

21-01-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**அறிமுகவுரை:-** கு. ரவீந்திரன் (ஆசிரியர்)

(தொண்டைமானாறு வீ. ம. வி)

**சொற்பொழிவு:-** பெரியபுராணம் (தொடர்)

**வழங்குபவர்:-** சிரேஷ்ட விரிவுரையாளர்அ. குமாரவேல்

(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

28-01-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## தை- 2005

**வெளியீட்டுரை:-** செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்

(உப அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**மதிப்புரை:-** ஆ. சிவநாதன்

(ஆசிரியர் மத்திய மகா வித்தியாலயம். நெல்லியடி.)

# வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2004 - ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோறுக்கு வழமைபோல் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்ட பின் அது பற்றிய முடிவுகள் 2005 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

# அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயபெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

ஆக்கங்களை வழங்கும் அன்பர்கள் ஆக்கங்களில் தங்கள் முகவரியினையும் தருமாறு வேண்டுகின்றோம்.

மலர்க்குழு :

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

பதிவு இலக்கம்: Q.D./58/NEWS/2003